# தமிழ் துரோகியே திரும்பிப்போ!


# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, தை 27 உ (9-2-71) செவ்வாய் துல்ஹஜ் பிறை 12 புத்தகம் 25 இதழ் 13


## அமைச்சர் குமாரசூரியருக்கு இரத்மலானையிலும் எதிர்ப்பு!

கடந்த 30ந் திகதி மாலை 5.30க்கு இரத்மலானை இந்துக் கல்லூரி சதுக்கத்தில் அமைந்துள்ள சர்வோதைய நிகேதனத்தில் சிரமதானத்தின் மூலம் கட்டப்பட்ட காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டப திறப்பு விழா வைபவம் நடைபெற்றது. அவ்வைபவத்தில் தபால், தந்தித்தொடர்புகள் அமைச்சர் செ. குமாரசூரியரும் கலந்துகொண்டார்.

அமைச்சரின் வருகை குறித்து சர்வோதய நிகேதனத்துக்குச் செல்லும் வீதி

(2-ம் பக்கம் பார்க்க)

## வாலிபர், மாணவர் மீது சி. ஐ டி. வேட்டை!

# ஆட்சியாளர் குலைநடுக்கம்!

ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்டிருக்கும் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ் இலங்கையெங்கணும் வளர்ந்துவரும் தீவிர எதிர்ப்பு இயக்கத்தினைக் கண்டு ஆட்சியாளர்கள் குலைநடுக்கமடைந்துள்ளனர்.

அண்மையில் நிதியமைச்சர் யாழ்ப்பாணம் சென்று திரும்பியபின், தமிழ் இலங்கையில் இளைஞர்கள், மாணவர்களிடையே வேகமாகப் பரவிவரும் அரசாங்க எதிர்ப்புணர்ச்சி பற்றி அமைச்சரவை மட்டத்தில் ஆராயப்பட்டதாகவும், அடக்குமுறையை ஏவி இவ்வெதிர்ப்பியக்கத்தை நசுக்கிவிடவேண்டுமென்று இதில் முடிவு செய்யப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதையடுத்து வடபகுதியில் அரசாங்க எதிர்ப்பியக்கத்தில் ஈடுபடுவோர் மீது—குறிப்பாக வாலிபர்கள், மாணவர்கள் மீது இரகசிய பொலீசார் வலை விரித்துள்ளனராம்.

தமிழினத்தை அழித்தொழிக்கும் தமிழ்விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆட்சியாளர்களுக்கு தமிழ் பிரதேசங்களில் கடுமையான எதிர்ப்பு வளர்ந்துவருவது தெரிந்ததே. 'தரப்படுத்தல்' என்னும் போர்வையில்கீழ் தமிழ் மாணவர்களின் கல்வி உரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த எதிர்ப்பு தீவிரமடைந்துள்ளது.

அமைச்சர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்யும்போதெல்லாம் ஆங்காங்கு இந்த

(11-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நிலங்கள் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கக் கட்சியிலுள்ள பெருந்தொகையான பா. உ. க்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறார்களாம். இப்படிச் செய்வதன் மூலமே கள்ளக் குடியேற்றக் காரர்கள் இம் மாகாணங்களில் உள்ள நிலங்களை ஆக்கிரமிப்பதை தடுக்க முடியுமென்று அவர்கள் கருதுகிறார்கள்.

—இப்படியொரு செய்தியை ஆளுங்கட்சி ஆதரவுப் பத்திரிகையான 'சன' 6-2-71 இதழில் வெளியிட்டுள்ளது.

## சுதந்திரன் கூற்று உண்மை! அமைச்சர் ஒப்புக்கொண்டார்!

1969ம் ஆண்டு நடைபெற்ற தபால் தந்திப் பயிற்சியாளர் பரீட்சை முடிவுகள் இன்னும் வெளிவராதது பற்றி பலவிதமான வதந்திகள் உலாவுகின்றன. அண்மையில் சுதந்திரனிலும் தமிழ் மாணவர்கள் அதிகமாக சித்தியடைந்தமையே இத்தாமதத்துக்கு காரணம் என செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தி உண்மைதான் என்பதை ஏற்கெனவே அமைச்சர் குமாரசூரியர் இன்னொருவருக்கு கூறியிருந்தாராம்.

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த ஆசிரியர் ஒருவர் அமைச்சர் குமாரசூரியருக்கு இளமைப்பருவத்தில் ஆரம்ப வகுப்புகளான அரிவரி முதலாம் வகுப்புகளில் கல்வி கற்பித்திருந்தார். இதனால் அந்த ஆசிரியரும் அமைச்சர் குமாரசூரியரும் அண்மைக் காலத்தில் நன்கு பழக்கமாக இருந்தார்கள். இந்நிலையில் தான் அண்மையில் தபால் தந்திப் பயிற்சியாளர் பரீட்சை சம்பந்தமான கதை வந்தபோது இந்த உண்மை வெளியானதாம்.

தபால் தந்தியாளர் பரீட்சையில் சிங்களவரைவிட அதிகமான தமிழர்கள் சித்தியடைந்திருப்பதாகவும், அரசாங்கத்தின் நெருக்குதலினால் அதை வெளியிடமுடியாமலிருப்பதாகவும் அமைச்சர் கூறினாராம். தான் அவசரமாக பரீட்சை முடிவுகளை வெளியிட்டால் தனது பதவிக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும் என்றும் கூறினாராம்.

(11ம் பக்கம் பார்க்க)

## சோசலிசமாம் சோசலிசம்...!

நடன ஆசிரியர்கள் பதவிக்கு கல்வி அமைச்சு அண்மையில் விண்ணப்பங்கள் கோரியிருந்தது. இதற்கு தமிழ் பகுதியிலிருந்தும் பலர் விண்ணப்பித்திருந்தனர். இப்பதவி நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை விரைவில் நடைபெறவிருக்கிறது. தமிழ்ப் பகுதியிலிருந்து இதற்கு விண்ணப்பமனுப்பியிருந்த ஒருவராவது இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லையாம். வழமை போலவே நடன ஆசிரியர்கள் நியமனத்தில் தமிழ்ப் பகுதிக்கு இம்முறையும் பட்டை நாமம்தான்! இதற்குப் பெயர்தான் சோசலிசமா?

## தமிழர் மானம் காத்தது திருமலை! அவமானம் தேடியது யாழ். நகர்!

சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் பூரணமாகப் பகிஷ்கரித்து நகரசபைக் கட்டடத்தில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு தமிழரின் மானத்தை கட்டிக் காத்தது திருமலை நகரசபை! ஆனால் யாழ்ப்பாணத்திலோ சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் யாழ் மாநகர முதல்வரும் மற்றும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்துகொண்டு யாழ் நகருக்கு அவமானத்தை தேடித் தந்துள்ளனர்.

சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைப்பதில்லையென்று திருமலை நகரசபை ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. ஆனால் அத்தீர்மானத்தை மீறி நகரசபைக்கு சொந்தமான சந்தைக் கட்டிடத்திலும் மணிக்கூண்டு கோபுரத்திலும் வேண்டுமென்று இரவோடிர

(11-ம் பக்கம் பார்க்க)

## தபாலமைச்சரே தமிழுக்கு எங்கே இடம்?




தபாலமைச்சர் - தமிழமைச்சர் தலைமையின்கீழ் இயங்கிவரும் அஞ்சல் திணைக்களத்துக்குரிய வாகனங்களில் 'ரஜயே தெபால் சேவய' என்ற தனிச்சிங்கள வாசகங்கள் மாத்திரமே 'இடம்' பெற்றுள்ளன; அதைக் காட்டும் படத்தைத்தான் மேலே பார்க்கிறீர்கள்—ஐயா தபாலமைச்சரே உங்கள் திணைக்களத்திலாவது தமிழுக்கு சிங்களத்துடன் சம உரிமை தரும் ஆற்றல் உங்களுக்கு இல்லையா? இல்லையானால் ஏன் இன்னும் பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்? இதுதான் உங்களது சோசலிசமா?

## ஐயோ தமிழா!

(சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற) பாடசாலைப் பிள்ளைகளின் அணிவகுப்பில் கலந்துகொண்ட சிங்களப் பிள்ளைகளின் கோஷ்டித் தலைவர் தாய் மொழியிலேயே கட்டளைகளைப் பிறப்பித்தார்—ஆனால் தமிழ் பிள்ளைகள் கோஷ்டித் தலைவர் ஆங்கிலத்திலேயே கட்டளைகளைக் கூறினார்.

—வீரகேசரி (5-2-71)


''உறுதிப்பாடு உடையவன்
அரும் பெரும் செயல்
ஆற்றுகிறான்.''

'தர்மசக்கரம்'

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெறுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.


## இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழ் இலங்கையில் பல்கலைக்கழகம்

தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தமிழ் மாணவர்களுக்கு இன அடிப்படையில் காட்டுமிராண்டித்தனமான பாரபட்சம் காட்டப்பட்டதை எதிர்த்து தமிழ் இலங்கை முழுவதும் கடுமையாக எழுந்த கண்டனத்தை தணித்து அதைத் திசை திருப்பும் நோக்குடன் வட பகுதிக்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் பல்கலைக்கழகம் ஒன்று தரப்போவதாக அண்மைக்காலமாக தீவிர பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது. வட பகுதிக்குமட்டுமல்ல கிழக்கிலங்கைக்கும் தனியே ஒரு பல்கலைக்கழகத்தினை அரசாங்கம் வாரி வழங்கப்போவதாகவும் பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ் இலங்கைக்கு இரு பல்கலைக்கழகங்களை தரப்போவதாக தபாலமைச்சர் குமாரசூரியரும் மற்றும் ஐக்கிய முன்னணியின் தமிழ் இலங்கை எடுபிடிகளும் தினசரிப் பத்திரிகைகளுக்கு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அறிக்கைக்குமேல் அறிக்கை விடுத்து வருகிறார்களே தவிர இப் பல்கலைக்கழகங்களை நிறுவுவது பற்றியோ பல்கலைக்கழகங்களின் அமைப்புமுறை பற்றியோ அரசாங்க மட்டத்தில் இதுவரை எதுவித தீர்மானமும் எடுக்கப்பட்டதாக நாம் கேள்விப்படவில்லை! வடபகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கென 1960ம் ஆண்டிலிருந்து ஒதுக்கப்பட்டுவரும் கண்துடைப்பு அடையாள மானியமான ரூபா பத்துதான் கடைசியாக நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலும் சேர்க்கப்பட்டிருக்கிறதே தவிர மேற்கொண்டு இது சம்பந்தமாக நிதியேதும் ஒதுக்கப்படவில்லை.

இந்நிலையில் பல்கலைக்கழகம் இதோ வருகிறது; அதோ வருகிறது என்று தமிழ் மக்களுக்கு தினசரிப் பத்திரிகைகளில் நீலம், சிவப்பு தலைப்புகளுடன் அறிக்கைகள் மட்டும் தவறாமல் வெளியிடப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகத்தை யாரும் எதிர்க்காதீர்; பல்கலைக்கழகம் பெற தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டும் என்றெல்லாம் ஆளுங் கட்சித் தரப்பிலிருந்து வேண்டுகோள்கள் விடப்படுகின்றன.

தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களது பிரதேசத்தில் தமிழைப் போதனா மொழியாகக்கொண்ட பூரணத்துவமுள்ள ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்று கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ் அறிஞர்களும் கல்விமான்களும் தொடர்ச்சியாகக் கோரிவருகிறார்கள். இக் கோரிக்கையை இலங்கைத் தமிழரசுக் கட்சியும் முழுமனதுடன் ஆதரித்து வந்திருக்கிறது;

எனவே தமிழ் இலங்கையில் முழுமைபெற்ற—தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு இந்த அரசாங்கம் அந்தரங்க சுத்தியுடன் முயற்சிக்குமானால் யாருமே அதை எதிர்க்கமாட்டார்கள்.

ஆனால் அதை விடுத்து, இப்போது இருக்கின்ற நல்ல கல்லூரிகளை நாசமாக்கி, அவற்றில் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பூரணத்துவமற்ற மூன்றாந்தர கல்வி ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி இதுதான் பல்கலைக்கழகம்; ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினால் அதை ஏற்றுக்கொள்வதற்கு தமிழ் பேசும் மக்கள் கல்லா மூடர்களல்லர்!

சிங்களப் பிரதேசத்தில் தனித்தனியாக சொந்தக் கட்டடங்களை ஏற்படுத்தி ஐந்து பல்கலைக் கழகங்களை நிறுவியிருக்கும் அரசாங்கத்தினால் தமிழ்பேசும் மக்களுக்கென தமிழ்பேசும் பிரதேசத்தில் அரசாங்க செலவில் ஏன் முழுமைபெற்ற ஒரு பல்கலைக்கழகத்தினை கட்டித் தரமுடியாது? தமிழ்பேசும் மக்கள் அளிக்கும் வரிப் பணத்தை பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கென தனியே ஒரு பல்கலைக்கழகத்தை கட்டித் தர வேண்டியது தட்டிக்கழிக்கமுடியாத அதன் கடமையாகும். இப்படியொரு பல்கலைக் கழகத்தினை நிறுவித் தரும்படி கேட்பதற்கு தமிழ் மக்களுக்கும் பூரண உரிமையுண்டு.

அதை விடுத்து 'தெருவிற் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு' உடைப்பதுபோல் வடபகுதியில் இருக்கும் நல்ல கல்லூரிகளில் கைவைத்து அவற்றை நாசப்படுத்த முயற்சிப்பது ஏன்? பல்கலைக்கழகம் நிறுவ பரமேஸ்வரக் கல்லூரி இராமநாதன் கல்லூரி போன்றவற்றின் கட்டடங்களை எடுத்துக் கொண்டால், அங்கு கல்விகற்கும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளின் கதியென்ன?

உத்தேச பல்கலைக்கழகம் தமிழ் மாணவர்களுக்கு மட்டுமல்ல—சிங்களவர்களுக்கும் சேர்த்துத்தான்; சிங்களமும் போதனாமொழியாக இருக்கும் என்று கூறிவிட்டார் தபாலமைச்சர். இதன் பொருள் தமிழ் மாணவர்கள்— இந்து மாணவர்களுக்கு மட்டுமேயுரியதாக இன்று இருக்கும் பரமேஸ்வரக் கல்லூரி பல்கலைக்கழகமானால் சிங்கள மாணவர்களுக்கும் அது சொந்தமாகும் என்பதுதான்! பரமேஸ்வராக் கல்லூரியை சேர் பொன். இராமநாதன் நிறுவியது இதற்குத்தானா என்பதை தமிழ் மக்கள் —குறிப்பாக இந்துக்கள்— சிந்தித்துப் பார்த்திடவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கென தனியொரு பல்கலைக் கழகம் நிறுவித்தருவதில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறையிருந்தால் பின்வருவனவற்றை செய்யட்டும்—

(1) தமிழ் இலங்கைப் பல்கலைக்கழகம் பூரணத்துவமுள்ளதாக—சகல துறைகளும் கொண்டதாக அமைய வேண்டும்.

(2) இப்போது இருக்கும் நல்ல கல்லூரிகளை அப்படியே நடக்க விட்டு விட்டு, அரசாங்கப்பணத்தில் தனிக்கட்டடம் நிறுவி பல்கலைக்கழகத்தை அங்கு ஏற்படுத்த வேண்டும்.

(3) சிங்களத்தை மட்டுமே போதனாமொழியாகக் கொண்டு வித்தியோதய வித்தியாலங்கார பல்கலைக்கழகங்கள் இருப்பது போல தமிழ் இலங்கைப் பல்கலைக்கழகம் தமிழை மட்டுமே போதனா மொழியாகக் கொண்டு—தமிழ் பண்பாட்டின் அடிப்படையில் இயங்க வேண்டும். (குறிப்பிட்ட சில காலத்துக்கு மட்டும் தமிழில் பயிற்ற முடியாத பாடங்களை ஆங்கிலத்தில் பயிற்றலாம்.)

(4) தமிழாய்ந்த—தமிழ் பற்றுமிக்க தமிழ் அறிஞர் ஒருவர் தமிழ் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட வேண்டும்.

இவைகளைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமானால் இப்பிரச்சினையில் எமது ஒத்துழைப்பும் பூரண ஆதரவும் அரசாங்கத்துக்கு எப்போதும் உண்டு என்று கூறி வைக்க விரும்புகிறோம்.

# பட்டிருப்பு தொகுதியில் மக்கள் இஷ்டம்போல் வாக்களிக்கவில்லை!

# காடைத்தனம் நிரூபிக்கப்பட்டுள்ளது!

# தம்பிராசாவின் தெரிவு சட்டப்படி செல்லாது!

## நீதியரசர் வழங்கிய தீர்ப்பு விபரம்!

ஐ. தே. க. சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. எஸ். யூ. தம்பிராசா தமது பா. உ. பதவியை இழந்தார். அவரது தேர்தல் சட்டப்படி செல்லாது என பட்டிருப்பு தேர்தல் ஆட்சேபனை வழக்கில் நீதியரசர் திரு. வீரமந்திரி தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த தேர்தலில் இத் தொகுதியில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் போட்டியிட்டு 647 வாக்குகளால் வெற்றிவாய்ப்பை இழந்தது தெரிந்ததே.

பட்டிருப்பு தேர்தல் ஆட்சேபனை வழக்கில் மனுதார் சார்பில் ஆஜராகி வழக்கை நடத்தியவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நீதியரசர் தமது தீர்ப்பில் கூறியுள்ளதாவது:-

"கடந்த மே மாதம் 2-ம் திகதி பட்டிருப்புத் தொகுதி வேட்பாளரான திரு. ராசமாணிக்கம் ஒரு கூட்டத்திற்காக மண்முனையிலிருந்து கொக்கட்டிச்சோலைக்கு செல்லும் வழியில் வழிமறிக்கப்பட்டு இவரது கார் சேதத்துக்குள்ளாக்கப் பட்டதுடன் இவர் பயமுறுத்தப்பட்டார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

திரு. இராசமாணிக்கத்தின் அனுதாபி ஒருவரான கிருபைரட்னம் என்பவர் 3வது பிரதிவாதி ரட்னத்தினால் கத்தியால், குத்தப்பட்டார் எனவும், திரு. இராசமாணிக்கத்துக்கு வாக்களித்தால் மேலும் தாக்கப்படுவாய் எனப் பயமுறுத்தப்பட்டார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தினத்தன்று நடைபெற்றதாகக் கூறப்படும் 6 சம்பவங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

எருவில் என்ற இடத்தில் வைத்து இராசமாணிக்கம் தடுத்து நிறுத்தி பயமுறுத்தப்பட்டது. மகிலூர்முனை வாக்களிப்பு நிலையத்தில் இராசமாணிக்கத்தின் தேர்தல் ஏஜண்டுகள் இருவர் வாக்களிப்புநிலையத்திலிருந்து துரத்தப்பட்டது. அம்பிலந்துறை வாக்களிப்பு நிலையத்துக்கு திரு. இராசமாணிக்கத்தின் ஏஜண்டுகள் வராமல் தடுக்கப்பட்டது, அரசடிதீவு வாக்களிப்பு நிலையத்தினுள் புகுந்த முதலாவது பிரதிவாதியின் ஆதரவாளர்கள் இராசமாணிக்கத்தின் ஏஜண்டுகளைப் பயமுறுத்தி துரத்தியது, முனைக்காடு வாக்களிபபு நிலையத்தில் அதிகாரி ஒருவர்பயமுறுத்தப்பட்டது, பெரிய கல்லாறு மகாவித்தியாலய நிலையத்துக்கு வாக்களிக்கச் சென்ற ஒருவர் தாக்கப்பட்டது ஆகியனவே இந்த குற்றச்சாட்டுக்களாகும். எனினும் இவை முதலாவது பிரதிவாதியினால் தூண்டப்பட்டே செய்யப்பட்ட செயல்கள் எனக் கூறிவிடமுடியாது.

இக்காரணங்களாலும் தேர்தல் காலத்தில் நடைபெற்ற வேறு சம்பவங்களினாலும் மேற்படி தொகுதியைச்சேர்ந்த வாக்காளர்கள் தமக்கு பிடித்த ஒருவரைத் தெரிவு செய்ய முடியாமல் போய்விட்டதென மனுதார் தெரிவித்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது;

தேர்தல் காலத்தில் நடைபெற்ற இந்த சம்பவங்கள் நிச்சயமாக இத் தேர்தல் முடிவை பாதிப்பனவாக அமைந்துள்ளன. இந்தத் தொகுதியில் வாக்காளர்கள் தமது இஷ்டம்போல் வாக்களிக்கவில்லை என்றே கூற வேண்டும். தேர்தல் தினத்தன்று இத் தொகுதியில் வேறு எங்கும் நடைபெறுதளவு காடைத்தனங்கள் நடைபெற்றுள்ளன.

## கண்காட்சியில் நடந்த 'போராட்டம்'!

அனைத்துலகத் தமிழாராய்ச்சி கழகத்தின் இலங்கைக் கிளை கொழும்பில் நடாத்தும் 'ஈழத்து தற்காலத் தமிழ் நூற் கண்காட்சி' தொடக்க விழாவின்போது அமரர் வன்னியசிங்கத்துக்கும் திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்குமிடையே நடைபெற்ற 'போராட்டம்' ஒன்றை பலர் நேரில் கண்டு ரசித்தனர். அமரர் வன்னியரும், சிறிமா அம்மையாரும் அங்கு எப்படிவந்தனர் என்று திகைக்காதீர்கள். நடந்தது இதுதான்;

திருமதி சிறிமாவோவைப் பாராட்டி, அரசாங்கத்துக்கு பந்தம் பிடிப்பதற்காக பாமா ராஜகோபால் என்பவரால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரமொன்று மாபெரும் 'வரலாற்று' நூலாக கணிக்கப்பட்டு 'ஸ்டாண்டில்' அங்கு வைக்கப்பட்டிருந்தது. கவிஞர் காசி ஆனந்தனின் தமிழன் கனவு, கரிகாலனின் அண்ணா ஒரு நோக்கு, பண்டிதர் சச்சிதானந்தத்தின் 'தியாக மாமலை' போன்ற நூல்கள் வெறுமனே பரப்பப்பட்டிருந்தன.

இதுகண்டு மனம்பொறுக்க முடியாத ஒருவர் சிறிமா அம்மையார் பற்றிய துண்டுப் பிரசுரத்தை எடுத்து கீழே போட்டுவிட்டு அது இருந்த 'ஸ்டாண்டில்' வன்னியர் கதை கூறும் 'தியாக மாமலை' நூலை வைத்தார்.

இதைப் பார்த்து நின்ற "தமிழனுக்கு உணர்ச்சி கூடாதென்று கூறிய" கலாநிதி உணர்ச்சிவசப்பட்டு ஓடோடிச்சென்று தியாக மாமலையை தூக்கி கீழே வைத்துவிட்டு சிறிமா அம்மையார் நூலை ஸ்டாண்டில் போட்டார். தமிழ் அன்பரோ மீண்டும் முன்செய்ததுபோல் செய்ய—கலாநிதி அதை மாற்றிவைக்க— இதைப் பார்த்து பலர் ரசித்தனர். கலாநிதியின் அடிமைப் புத்தியை மனதிற்குள் திட்டவும் செய்தனர்;

## தமிழ்த்துரோகி...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

யோரத்தில் உள்ள மதில் சுவரில் பல எதிர்ப்புச் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. அவற்றில் "குமார சூரியரே திரும்பிப் போ!" "தமிழ் துரோகிக்குத்தமிழர் மத்தியில் இடமில்லை" என்பன போன்ற கடும் எதிர்ப்புச் சுலோகங்கள் குறிப்பிடத்தக்கவை!

அச்சுலோகங்கள் அமைச்சர் வருகைக்கு முதல் நாள் எழுதப்பட்டமையால் போலும் அமைச்சர் வருகைக்குச் சில மணி நேரம் முன்பு,வரை வீதியில் சென்றவர்கள் கண்களுக்கு விருந்தாயிருந்தன. அமைச்சரை அழைத்த எடுபிடிகளே அமைச்சர் வருகைக்குச் சில மணி நேரத்துக்கு முன்னர் சீமெந்தினால் அவற்றை அழிக்க முயற்சித்தார்கள். அழித்தவர்களின் கஞ்சத்தனம் போலும் சிறிதளவு சீமேந்து பூசியமையினால் முயற்சியில் வெற்றிபெறவில்லை. இப்போதும் வாசிக்கக் கூடியதாக இருக்கின்றது;

## இதோ ஒரு தமிழ்த்துரோகி!

'சிங்களம்உத்தியோக மொழியாக எப்பவோ ஏற்கப்பட்டு விட்டது. இங்குள்ள சிலர் தமிழ் மொழியையும் உத்தியோக மொழி ஆக்குவோம் என்று கூறுவது, ஒரு ஏமாற்றுக்கோஷமேயாகும்'

—வி. பொன்னம்பலம்

(ஈழநாடு 28-1-71)

## வாழ்க மணமக்கள்!

தமிழரசுக் கட்சியின் பழம்பெரும் உறுப்பினரும் சுன்னாகம் பட்டின சபை உறுப்பினரும் அகில இலங்கை பட்டின சபைகள் சமாச யாழ் மாவட்ட பிரதிநிதியுமாகிய திரு. ஆசீர்வாதம் ஹென்றி அவர்கள் செல்வி. திரேசா பீ. ஏ. அவர்களை 5-2-71ல் திருமணம் செய்து கொண்டார்.

மணமக்கள் நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பனை உண்மையானால்...?

அன்பு நண்பா,

தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்குமிடையே எல்லைக் கோடுகளாலும் அரசியல் அமைப்புக்களாலும் எத்துணை வேறுபாடுகளிருந்திடினும் கலையால், பண்பாட்டால், மொழியால், மரபால் இருநாட்டுத் தமிழர்களும் ஒருவரே; இருநாட்டுத் தமிழ்மக்களுக்குமிடையேயிருந்து வரும் கலை, இலக்கிய,மொழி ஒருமைப்பாடுகள் மேலும் இறுகிட வேண்டும்; என்பதுமட்டுமே இன்றுவரை நமதுநோக்கமாக இருந்துவந்திடுகிறது. தமிழ்நாட்டுடன் தமிழ் இலங்கையை அரசியல் ரீதியில் கற்பனையில்தானும் இதுவரை இணைத்துப் பார்த்திடவில்லை நாம்; சிங்கள மக்களுடன் சம நிலையில் இருந்து இணங்கி வாழ்ந்திடவேண்டுமென்ற ஒரே கருத்துடன்—நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறு ஏற்படுத்தாத முறையில்-இணைப்பரசு கோரி வருகிறோம் நாம்-ஆனால் சிங்களத் தலைவர்களிடையே அத்தகைய சிந்தனை வளர்ந்து வருவதாக இல்லையே!

நண்பா, லெஸ்லி குணவர்த்தன இருக்கிறாரே—சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர், முன்பு தமிழுக்கு சம அந்தஸ்து கேட்டவர்; தமிழர்களின் நம்பிக்கைக்கு ஒரு காலத்தில் பாத்திரராக இருந்தவர்; சிங்களத் தலைவர்களிலே அமைதிப் போக்குடையவர் என்று கருதப்படுபவர்; உணர்ச்சி வசப்படாதவர்; அப்படிப்பட்டவரான லெஸ்லி குணவர்த்தனவே—கே. எம். பி. இராசரத்தின, ஹேமாபசநாயக்கா போன்றோரின் தரத்திற்கு இறங்கி—நாலாந்திர அரசியல்வாதிபோல அண்மையில் தெரிவித்துள்ள கருத்தினைப் படித்திட்டபோது—சிங்களத்தலைவர்கள் மீது வைத்திருந்த கொஞ்நஞ்ச நம்பிக்கையும் சிதறிவிட்டது எனக்கு.

அதுமட்டுமல்ல—சிங்களத் தலைவர்கள் போல நாமும் வேறுவிதமாகச் சிந்தனையை செலுத்தினால்என்ன என்றுகூடத் தோன்றியது எனக்கு!.

''பல்வேறு இனங்கள் வாழும் நாடுகளில் எல்லாம் சிறுபான்மை இனங்களின் பயத்தைப் போக்குவதற்கு அவர்களுக்கு விசேட உரிமைகள் அளிப்பதன்மூலமே தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடிந்ததென்பதை ஏனைய நாடுகளின் அனுபவங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.........''

இவ்வாறு கூறுகிறார்லெஸ்லி குணவர்த்தன அவர்கள் 21-12-70 டெயிலி நியூஸ் ஏட்டில்; மொழிக் கொள்கையில் குத்துக்கரணமடித்து சிங்களம் மட்டும் கொள்கையை சமசமாஜக் கட்சி ஏற்றுக்கொண்டது சரியென்று நிலைநாட்ட இதிலே அவர் முயற்சித்திருக்கிறார்; அவர் சொல்வது சரிதானே......சிறுபான்மை இனங்களுக்கு விசேட சலுகை தரப்படுதல் அவசியம் தானே; அதைத்தானே நாமும் கோருகிறோம் என்பாய்—அவசரப்படாமல் அவர் மேலும் கூறப்போவதைப்படி!

''.....இந்த உண்மை இலங்கையின் நிலையை விளக்கப் போதுமானது. சிறிய இனங்களின் மனதில் இருக்கும் அச்சங்களை அகற்றுவதே தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கு அடி அத்திவாரம் என்பதை இது விளக்குகிறது.........

''எப்படியிருப்பினும் இலங்கையின் பெரும்பான்மையான மக்களாக இருக்கும் சிங்களவர்கள் தங்களைப் பெரும்பான்மை இனத்தினராகக் கருதவில்லை.; சிறுபான்மையினராகவே கருதுகிறார்கள்.

''இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இலங்கையில் சிறுபான்மையினராக வாழ்ந்திடினும், இலங்கையின் வட பகுதி எல்லையை அடுத்து தென்இந்தியாவில் வாழும் தமிழ் மக்களுடன் இணைத்துப் பார்க்கும்போது தமிழ் மக்களே பெரும்பான்மையினராகவும் சிங்களவர் சிறுபான்மையினராகவும் காணப்படுகிறார்கள். அத்துடன் இலங்கையின் வரலாற்றை எடுத்துப் புரட்டிடினும், இந்த இரு பகுதியினருக்குமிடையே நடந்த போராட்டமே அங்கும் காணப்படுகிறது.

''இந்த உண்மைகள்தாம், இலங்கையில் பெரும்பான்மையினராக வாழ்ந்திடினும், சிங்களமக்கள் தமது இனத்தைப்பற்றியும் மொழிபற்றியும் அச்சப்படும் நிலையை தோற்றுவித்திருக்கிறது. சிங்களவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அச்சம் ஏனைய நாடுகளில் வாழும சிறிய இனத்தவர்களுக்கு இருக்கக் கூடிய அச்சத்தைப் போன்றதே.

''எனவே சிறுபான்மை இனத்தவர்களாகிய சிங்களவர்களின் அச்சத்தைப் போக்கிட அவர்களுக்கு விசேட பாதுகாப்புகள் தரப்படவேண்டும்! அப்போது தான் தேசிய ஐக்கியம் வளரமுடியும். இதனால்தான் சட்டபூர்வமாக இந்நாட்டில் சிங்களத்துக்கு விசேட இடம் ஒன்றைத் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இது தமிழ் மக்களுக்கு செய்யப்பட்ட அநீதிபோலத் தோன்றினாலும் வரலாற்று உண்மைகளின்படி உத்தியோக மொழிக் கொள்கை (சிங்களம் மட்டும் கொள்கை) சரியானதே.''

## அரசியல் மேடை

—இதுதான் நண்பா லெஸ்லி குணவர்த்தன தமது கட்சியின் குத்துக் கரணத்துக்கு கூறியிருக்கும் 'நியாயம்'! ஓநாய், ஆட்டுக்குட்டிக்கு கூறிய நியாயத்தையும் இது தூக்கியெறிந்துவிட்டதல்லவா?

இலங்கையும், இந்தியாவும் தனித்தனியான வெவ்வேறு நாடுகள்; இந்தியாவுக்குள்ள இறைமையும் சுதந்திரமும் இலங்கைக்கும் உண்டு. இரு நாடுகளுமே காமன்வெல்த்திலும், ஐ. நா. சபையிலும் அங்கம் வகித்திடுகின்றன; நிலைமை இப்படி இருந்திடும்போது இந்திய நாட்டில் தமிழர்கள் வாழுகிறார்கள் என்பதற்காக இலங்கையில் வாழும் தமிழர்களின் மொழி இன உரிமைகளைப் பறித்திடுவது நியாயமாம்! சிங்களத் தலைவர்களின் சிந்தனை—எத்துணை தூரம் குறுகிவிட்டது; குரூரமாகிவிட்டதென்பதை இது ஒன்றே எடுத்துக் காட்டிடவில்லையா?

பிரெஞ்சு பேசும் மக்களுக்கு என்று பிரெஞ்சு நாடு ஒன்று தனியாக இருக்கிறது; ஆகவே கனடா வாழ் பிரெஞ்சு மக்களுக்கு மொழியுரிமை தரமாட்டோம் என்று கனடா அரசு மறுத்திடவில்லை. ஆங்கிலத்துடன் பிரெஞ்சு மொழிக்கும் சம உரிமை தரப்பட்டிருக்கிறது அங்கே! இதை ஏன் எண்ணிப் பார்த்திடவில்லை இங்குள்ள சிங்களத் தலைவர்கள்?

### யூகோவைப் பாரீர்!

சமசமாசக் கட்சியின் 4வது சர்வதேசியவாதிகள் ஆட்சிபுரியும் நாடு யூகோஸ்லாவியா. அந்நாட்டில் 6 சமஷ்டிக்குடியரசுகள் இருக்கின்றன. அக்குடியரசுகளில் ஒன்று சேபியாக் குடியரசு. இந்தக் குடியரசின் தெற்குப்புறமாக கொஸ்வோ—மெற்றோ என்றோர் பிரதேச அரசு இருக்கிறது. இப்பிரதேசத்தில் வாழ்வோர் 65 வீதம் அல்பேனிய மக்கள். இதில் முக்கியமானது என்னவென்றால் அல்பேனிய மக்கள் வாழும் கொஸ்வோ—மெற்றோ பிரதேசத்துக்கு அருகிலேயே அல்பேனியநாடும் இருப்பதுதான்!

அல்பேனியநாட்டில் வாழும் அல்பேனிய மக்களுடன் கொஸ்வோ—மெற்றோ பிரதேசத்தில் வாழும் அல்பேனியர்களையும் கற்பனையில் இணைத்துப் பார்த்து கொஸ்வோ—மெற்றோ அல்பேனியர்களுக்கு மொழி, இன உரிமை தர முடியாது என்று கூறவில்லை யூகோஸ்லாவியா தலைவர்கள். அருகே அல்பேனிய நாடு இருந்திடினும், தனது நாட்டில் வாழும் அல்பேனியர்களுக்கு மொழி, இன உரிமைகளை பூரணமாக வழங்கியிருக்கிறது யூகோஸ்லேவியா!

### அரசியல் கோமாளிகள்

ஆனால் யூகோவைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சமசமாஜிகள் இங்கு குதர்க்க அரசியல்பேசி, தமிழ்பேசும் மக்களின் மொழி இன உரிமைகளைப் பறிப்பதற்கு துதிபாடுகின்றனர்! தமது குத்துக்கரணத்தை மறைப்பதற்கு கோமாளித்தனமான அரசியல் பேசுகின்றனர்! நாலாந்தர சிங்கள அரசியல்வாதி பேசும் பேச்சை இன்று இடதுசாரிகளான சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும் பேசத் துவங்கிவிட்டனர்! அந்தோ பரிதாபம்!!

நண்பா, ஒன்று மாத்திரம் கூறிக்கொள்ள விரும்புகிறேன்—ஈழத்தமிழர்கள் தமிழ் நாட்டோடு அரசியல் ரீதியில் இணைவது பற்றி விளையாட்டுக்குக்கூட கற்பனை செய்துபார்க்கவில்லை இதுவரை! ஆனால், சிங்களவர்களே தமிழர்களுக்கு இப்போது அந்தச் சிந்தனையை தூண்டிவிட முயலுகிறார்கள் போலும்!

### பாலம் அமைத்திட முடியாதா?

தென்னகத்துத் தமிழர்களையும் ஈழத்துத் தமிழர்களையும் ஒன்றுசேர்த்துப் பார்க்க சிங்களவர்களே விரும்பினால் அதைத் தடுத்து நிறுத்த யாரால் முடியும்? சிங்களவர்கள் தமது கற்பனையில் இருநாட்டுத் தமிழர்களையும் ஒன்றாக இணைத்துப் பார்ப்பதுபோல, தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஈழத் தமிழர்களும் கற்பனை செய்ய ஆரம்பித்தால் அதன்முடிவு என்னாகும்? தமிழகத் தமிழனும் ஈழத்தமிழனும் இணைந்து வாழவேண்டுமென்று முடிவுசெய்துவிட்டானென்றால் 'சிங்களத் தீவுக்கு' பாலமமைத்திடுவதா கஷ்டமான காரியம்?

ஈழத்தமிழர்கள் ஒரே இலங்கையில் சமஷ்டி அரசின்கீழ் சம அந்தஸ்துடன் இணைந்துவாழ்வதை சிங்களவர்கள் விரும்புகிறார்களா அல்லது தமிழ் நாட்டோடு ஈழத்தமிழர்கள் சேர்வதை விரும்புகிறார்களா?இதற்குசிங்களத் தலைவர்கள் பதில் கூறவேண்டும்!

தமிழகத்தோடு அரசியல் ரீதியிலும் இணைந்திடவேண்டுமென்று ஈழத்தமிழர்கள் ஒரு கட்டத்தில் முடிவு எடுப்பார்களானால் அதற்கு மூலகாரணமாக இருக்கப்போவது சிங்களத தலைவர்களின் குறுகிய சிந்தனையே!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# பல்கலைக்கழகத்தில் மோசடி!

## தமிழர்களின் வரலாற்றுச் செல்வங்கள் களவாடப்பட்டன!

(சுதந்திரன் பல்கலைக்கழக நிருபர்)

பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையிலே கடமையாற்றும் தமிழர்களாயுள்ள சில விரிவுரையாளர்கள் தமிழருக்கு எதிராக மேற்கொண்ட சில மோசடிகள் அம்பலமாகியுள்ளன.

இந்தச் சதியிலே தமிழர் வந்தேறுகுடிகள் என்ற கோஷ்டிக்குத் தலைமை வகித்து தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களே வாழ்ந்தார்கள் என்ற கொள்கையைப் பரப்பி வரும் ஒருவர் முன்னிற்கின்றார் என்று தெரிகிறது.

இந்த வரலாற்று விரிவுரையாளர் வரலாற்றைச் சிறப்புப் பாடமாக எடுத்தபோது இரண்டாவது வகுப்பில் அதுவும் கீழ்ப் பிரிவில்தான் சித்தியடைந்த போதிலும், தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவருக்கு விரிவுரையாளருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதினாலேயே நியமிக்கப்பட்டவராவார். இவரது பெயரி [illegible]

தமிழால் விரிவுரையாளராகப் பதவி பெற்று வயிற்றுச் சோற்றுக்கு வழிதேடிய இவர் தமிழ் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக முனைந்துள்ளார்.

இவருக்குச் சாதகமாக கொழும்பு குதிரைத்திடல் பல்கலைக்கழகத்தில் அண்மையில் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்குப் போட்டியிட்டுத் தோற்று தகுதியற்றவராய் நிராகரிக்கப்பட்ட இரு சிரேட்ட தமிழ் விரிவுரையாளர்களும் இருப்பதாகத் தெரியவருகிறது.

### வன்னியர் வரலாற்றுப் பட்டயம் களவாடப்பட்டது!

இலங்கைத் தமிழரின் வரலாறு எழுதப்படாதுள்ள இன்றைய நிலையில் தமிழரின் வரலாற்றினை ஆராய்ந்து கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பியுள்ள கலாநிதி சி.

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என். எம். பெரேராவே குத்துக்கரணமடித்தபின் ஏனைய சிங்களத் தலைவர்கள் எம்மாத்திரம்?

## தமிழினத்தின் உரிமைகளை தமிழர்களே போராடிப் பெற வேண்டும்

'ஒரு இனத்தின் சுதந்திரத்தையோ உரிமையையோ இன்னொரு இனம் பெற்றுக்கொடுக்கும் என்பது வெறும் கண்துடைப்பு. தமிழினத்தின் உரிமைகளைத் தமிழரே போராடித்தான் பெறமுடியும் சிங்கள மந்திரிகளாலும் — தலைவர்களாலும் எமது உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது. முன்பெல்லாம் சமதர்மப் பேசி வந்த டாக்டர் என். எம். பெரேரா கூட்டணியில் சேர்ந்து ஒரு மந்திரிப் பதவி பெற்றதோடு தமது கொள்கையையே கைவிட்டார். சிங்களவர்களைத் தலைவர்களாகக் கொண்ட எந்த ஒரு கட்சியாலும் தமிழர்களின் உரிமை கிடைக்கமாட்டாது. எனவே தமதுரிமையைப் பெறத் தமிழரே போராட வேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சாவகச்சேரி நா. உ. வ. ந. நவரத்தினம் கூறினார். கூட்டத்திற்கு வழக்கறிஞர் ம. கதிரவேலு தலைமை வகித்தார்.

திரு: தவரத்தினம் மேலும் கூறியதாவது:—

தமிழினத்துக்காகப் போராடி வரும் ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சியே! இது ஒரு அரசியற் கட்சியல்ல; இது ஒரு விடுதலை இயக்கம். இன்றைய அரசாங்கம் செய்யும் அநீதிகளை விளக்குவதற்கே நாம் தொகுதி தோறும் பிரசாரக் கூட்டம் நடத்தி வருகிறோம் தேர்தல் காலங்களில் மாத்திரம் உங்கள் முன்தோன்றி, வாக்குப் பெறுவதற்காக மட்டும் நாம் கூடுவதில்லை. இன்றைய கூட்டத்தில் யாரையும் குறை கூறவோ இல்லையேல் தமக்கு வாக்குத் தேடவோ நாம் வரவில்லை. இன்றைய தமிழரின் பிரச்சினைகளை உங்கள் முன் கூறவே வந்துள்ளோம்.

### அமிர் தோல்வி தமிழினத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு

இன்றைய அரசியற் தலைவர்கள் எல்லாம் பத்திரிகையாளர்களை வீட்டில் அழைத்து வைத்து அவர்களுக்கு மட்டும் பேசிக் காட்டி பத்திரிகைகளில் இடம் பெறச் செய்கிறார்கள். பத்திரிகைகளும் கைக் கூலிகளாகவும் அரசுக்கு பயந்தும் உண்மைகளை வெளியிட மறுக்கின்றன. தமிழரசுக் கட்சியினர் பேசும் பேச்சுக்களை வெளியிடாது இருட்டடிப்புச் செய்து ஒரு மூலையில் 'அவர் பேசினார்' என்று மட்டும் குறிப்பிட்டு மறைத்து விடும் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்துத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. தமிழர்களின் குறைகளை எடுத்துக் காட்டி நாம் வாதிடப் பெரியதொரு மேடை உள்ளது: அதுதான் பாராளுமன்ற மேடை! அங்கு நாம் தமிழர் குரலை எடுத்துரைப்போம். தமிழர்களின் வலுத்த குரலை — பெரிய குரலை பாராளுமன்றத்திற்கு அனுப்பத் தவறி விட்டீர்கள் நண்பர் அமிர்தலிங்கத்தின் தோல்வியால் தமிழினமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

### பண்டிதர் பேச்சு

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'தமிழரசுக் கட்சியினர் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் 'தமிழ் தமிழ்' என்றே சொல்கிறார்கள். தப்பித் தவறி தமிழில் இல்லாத ஒரு கடிதம் அவர்களிடம் காற்றில் பறந்து சென்றாலும் தமிழ்ப் புறக்கணிக்கப்பட்டு விட்டது என்று கூக்குரலிடுகிறார்கள்'; என்று அமைச்சர் கே. பி. இரத்நாயக்கா கூறினார்.

தமிழ் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்படுகிறது என்பதற்கு அத்தாட்சியாக பல கடிதங்கள் உள்ளன. எந்தெந்த் துறையில் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதையெல்லாம் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்ட நான் ஒரு கண் காட்சி நடாத்த உள்ளேன். 'ஒரு கடிதம் மட்டும் தான் சிங்களத்தில் வந்ததா? என்பதை கே. பி. ரத்நாயக்காவும்—தமிழ் அமைச்சர் செ. குமாரசூரியரும் அறிவதற்காக அவர்களையும் வந்து பார்வையிடும்படி அவர்களுக்கும் அழைப்பு அனுப்ப உள்ளேன்.

### தினகரனின் தில்லு முல்லு

இன்றைய லேக் ஹவுஸ் பத்திரிகைகளை எல்லாம் அரசாங்கத்திற்குத் துதிபாடுகின்றன. பல பத்திரிகைகளுக்கு அரசாங்கம் பண உதவி செய்கிறது. ஆனால் லேக் ஹவுஸ்க்கு அரசாங்கம் பண உதவி செய்யாமலே—எங்கே அது தன்னை சுவீகரித்து விடுமோ என்ற அச்சத்தில் முதலாம் பக்கத்தை கூட்டணியினருக்காக ஒதுக்கி விட்டுள்ளது. தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது உறவினர் ஒருவர் சிங்களம் படித்து விட்டிருப்பதாகவும்; அவருக்கு ஒரு உத்தியோகம் பெற்றுத் தரும்படியும் அமைச்சரைக் கேட்டதாக ஒருநாள் செய்தி வெளியிட்ட 'தினகரன்' மறுமுறை ஒரு பிரதிநிதி தமது மருமகனுக்கு வேலை கேட்டதாக வெளியிட்டது.

இது பற்றி, நான் குறிப்பிட்ட அமைச்சரைப் பாராளுமன்றத்தில் கேட்டபோது. அவர், எந்தப் பத்திரிகை எப்படி வெளியிட்டது.; நான் அப்படி எதுவும் சொல்லவில்லையே! என்றார். நான் 'தினகரன்' பிரசுரித்ததாகக் கூறியதும் அவர் கேட்டார் 'தினகரனை நம்புகிறீர்களா? அது வெளியிடுவது எல்லாம் பொய்' என்று கூறினார்.

### எனது எச்சரிக்கை

இதன் பின்னும் தினகரன் மறுப்புத் தெரிவிக்காமல் இருக்கவே, நான் தினகரன் நிருபர் ஒருவரை அழைத்து. 'மறுப்புச் செய்திவெளியிடாவிட்டால் தினகரன் பத்திரிகைகளை நாம் கொளுத்துவோம் என்று உங்கள் ஆசிரியருக்குச் சொல்லும்' என்று சொன்ன பின்னரே அடுத்த நாள் நாலாம் பக்கத்தில் மறுப்புச் செய்தியை வெளியிட்டது.

தமிழரின் மொழி அழியாதிருக்கத் தமிழரே போராட வேண்டும் தமிழன் ஒருவன் தன் மொழிக்காகப் போராடினால் அவன் இன வெறியன்; ஆனால் சிங்களவன் ஒருவன் தமிழை எதிர்த்துப் போராடினால் அவன் தேசிய வீரன். 1966-ம் ஆண்டு சனவரி மாதம் எட்டாம் நாள் தமிழ் மொழிச்சட்டவிதிகளை எதிர்த்து ஊர்வலம் நடத்தி தவறுதலாகத் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான இரத்தினசாராவிற்குநினைவுச் சின்னம் திறந்து வைத்துப்பேசிய பொழுது இந்நாட்டுப் பிரதமர் கூறினார் 'தனது நாட்டையும் மொழியையும் மக்களையும் இனத்தையும் காப்பாற்ற ஒவ்வொருவரும் உயிர்த்தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும், என்று.

### பிரதமர் சொற்கேளீர்

ஆம், நாட்டின் பிரதமர் கோரியது போல் 'ஒவ்வொரு தமிழனும், தனது நாட்டையும் மொழியையும் இனத்தையும் காப்பாற்ற உயிர்த்தியாகம் செய்யத் தயாராக உள்ளான்' என்பதைப் பாராளுமன்றத்தில் நான் பிரதமருக்கு எடுத்துக் கூற இருக்கிறேன். சிங்களவன் ஒருவன் தன்னினம், மொழிக்காக எவ்வளவு கடமைப்பட்டுள்ளானோ அப்படியே தமிழரும் கடமைப்பட்டுள்ளார்கள். தமிழினத்தின் விடுதலை தமிழனாலேயே கிடைக்க வேண்டும். இன்னொரு இனம் பெற்றுத் தருவது என்பது சரித்திரத்தியேலே இல்லை. அப்படி நம்பி இருப்பது இலவு காத்த கிளிக்கு ஒப்பாகும்.



### ஜெயக்கொடி பேச்சு

உடுப்பிட்டித் தொகுதி நா. உ. திரு. க. ஜெயக்கொடி பேசுகையில் குறிப்பிட்டதாவது: சிங்களம் நீதிமன்ற மொழியானால் வெகுவிரைவில் தமிழ் அழிக்கப்படும். நீதிமன்றத்தில் சென்று வழக்காளி தனது வழக்கை முறையிட மட்டுமே தமிழ் உபயோகிக்கப்படும். ஆனால் அதைப் பதிவது சிங்களத்தில்! வழக்கறிஞர்கள் விரும்பினால் மேலிட அனுமதியோடு ஆங்கிலத்தில் வாதிடலாம். 50 வீதம் ஆங்கிலமொழி தெரிந்திருந்தும் இன்று ஆங்கிலத்திலே பதியப்படும் போது அவதியுறும் மக்கள் சிங்களத்தில் பதியப்படும் போது எந்நிலைக்காளாவர்?

ஒவ்வொரு துறையிலும் சிங்களத்தைப் புகுத்தி மெல்ல மெல்லத் தமிழை அழிப்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

### சிங்களம் தமிழ் இனத்தை அழிக்கும் செந்தி

இன்னும் சிறிது காலத்தில் கணவனும் மனைவியும் மட்டும் தமிழில் பேசும் நிலை வரும். அதன் பின் இன்று புத்தளம், சிலாபம் முதலிய இடங்களில் நிகழ்வது போன்ற நிலையே உருவாகும். இன்று, புத்தளம். சிலாபம் முதலிய இடங்களில் வதியும் 60, 65 வயது முதியவர்களை அணுகி ''நீங்கள் யார்?'' என்று கேட்டால் அவர்கள் ''நாம் தமிழர்'' என்பர். 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களைக் கேட்டால் அவர்கள் ''நாம் சிங்களவர்'' என்றே கூறுவர்: அவர்களின் தாய் தந்தையர் தமிழராய் இருந்தும் வீட்டு மொழியாகக் கூட தமிழை உபயோகிக்காததால்—உபயோகிக்க முடியாததால் பிள்ளைகள் சிங்களத்தில் பேசி, சிங்களத்திலே வளர்ந்து சிங்களவர்களே ஆகிவிட்டார்கள். ஆனால், அவர்களின் பேரன், பேத்திகளின் உறுதிகளில் தமிழ் கையெழுத்துத் தானிருக்கும். அதைக்கொண்டு தான் அவர்கள் தாம் தமிழர் என்பதை அறிய முடியும். இப்படியே, நாட்டின் பல் வேறு துறைகளிலும் சிங்களம் புகுந்தால் தமிழர் அழிந்து விடுவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டையில் தமிழரசுத் தலைவர்கள் முழக்கம்

## வேறுபாட்டை உங்களால் காண முடிகிறதா?



இந்தப் படங்களைப் பாருங்கள். இவை அண்மையில் மாதேசாதிபதி வில்லியம [illegible] அவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்தபோது எடுத்த படங்கள். ஒரு படத்தில் தேசாதிபதி [illegible] மற்றோர் படத்தில் தேசாதிபதியுடன் இந்துசமயக் குரு ஒருவரும் காட்சி தருகின்றனர். இந்த இரு காட்சிகளிலும் ஒரு மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்க உங்களால் முடிகிறதா? முடியாவிட்டால் 11-ம் பக்கம் பாருங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

க. குகனேசன்,
இருபாலை;

கே: கடவுள் இல்லை என்று கூறும் பொதுவுடமைக்காரர்களைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

ப: இல்லை நான் இருக்கிறேன் என்று சவால் விட்டுக்கொண்டு கடவுள் தங்களுடன் போட்டிக்கு வரமாட்டார் என்ற துணிச்சலால்தான் அப்படிக் கூறுகிறார்கள்!

கே: மாசே துங் சிந்தனை ஒருவனது வாழ்க்கைக்குவழிகாட்டியாக இருக்குமா?

ப: சுயசிந்தனையை இழந்தவனுக்கு வேறு எவருடைய சிந்தனையும் பயன் தரமாட்டாது!

ஃ

அ. ச. ஆனந்தன்,
கந்தர் மடம்;

கே: அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானத்திற்கு 'வடக்கு, கிழக்கு மாகாணங்களுடன் மலையகத்திலும் தமிழே நீதிமன்ற மொழியாக வேண்டும்' என்று தமிழரசார் இருத்தம் கொண்டுவருவரா?

ப: ஆம், அப்படித்தான் கொண்டுவருகிறார்கள்: இலங்கையெங்கணும் சிங்களமும் தமிழும் நீதிமன்ற மொழியாக்கப்படவேண்டும் என்பதே தமிழரசாரின் திருத்தத் தீர்மானமாகும்;

கே: இக்கோரிக்கை நிராகரிக்கப்படின் குமாரசூரியர் பதவியில் இருந்து விலகுவாரா?

ப: அவ்வளவுக்கு அவருக்கு தமிழுணர்ச்சி இருப்பதாக நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? பாவம் ஏமாறப்போகிறீர்கள்!

ஃ

எஸ். சுப்பையா,
கொழும்பு—4

கே: மலையக எழுத்தாளர் மன்ற விழாவில் காசி, ஆனந்தன் கவிதையை எச்.எம். பி. கிண்டல் செய்திருக்கிறாரே பார்த்தீர்களா?

ப: பார்த்தேன். 'கழுதையறியுமோ கற்பூரவாசனை' என்ற பழமொழிதான் எனக்கு அப்போது ஞாபகம் வந்தது!

ஃ

க. சிவசண்முகராசா,
மட்டக்களப்பு.

கே: இந்த வருட ஆரம்பத்திலிருந்து கடந்த 26-1-71 வரை வெளியான ஒவ்வொரு நோன்மதி தின ''சிந்தாமணி''யின் தலைப்புச் செய்திகளையும் கவனித்தீர்களா?

ப: கவனித்தேன்— தமிழ்நாட்டிலிருந்து திரைப்படங்கள், பத்திரிகை, சஞ்சிகைகள் இறக்குமதிக்கு எதிராக நஞ்சு கக்கப்பட்டிருக்கிறது ஒவ்வொன்றிலும்!!

ஃ

ச. அருளம்பலம்,
நல்லூர்.

கே: யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த நிதியமைச்சர் டாக்டர் என். எம். புதிய ஐம்பது ரூபா நோட்டுக்களை பௌத்த கோயிலுக்கும் இந்துக் கோயிலுக்கும்கொடுத்து வழிபட்டாராமே!

ப: 'கடவுளே, என்னைநம்புவீராக; உமக்குக் காணிக்கை தரும் இந்தப் புதுநோட்டுக்களைச் செல்லாத நோட்டுக்களாக்க மாட்டேன்; பயமின்றி ஏற்றருளும்' என்று அவர் வழிபட்டிருக்கக்கூடும்!

கே: கோவிலுக்குப் போகும்படி மார்க்சிசம் சொல்லுகிறதா?

ப: ஆம், சந்தர்ப்பவாத (என். எம். 'பிராண்ட்') மார்க்சிசம் அப்படித்தான் கூறுகிறதாம்!

ஃ

ஸ்ரீகணநாதன்,
அளவெட்டி;

கே: ஆலாலசுந்தரம் பொதுமேடைக்கு வரும்படி வ. பொன்னம்பலத்தை அழைத்திருந்தாரே, வ. பொ. அதற்குப் பதில் கொடுத்தாரா?

ப: நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் இல்லாதவர்கள் பொதுமேடை அழைப்பை ஏற்பார்கள் என்று நம்புகிறீர்களா?

கே: ஜீ. ஜீ.யின் வேண்டுகோளின்படி 12 தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களையும் சென்ற தேர்தலில் தமிழ் மக்கள் தெரிவு செய்திருந்தால் இன்று என்ன நடந்திருக்கும்?

ப: 12 தமிழ்த் துரோகிகள் பாராளுமன்றத்தில் இருப்பார்கள்!

ஃ

நெல்லை ஐ. நடேஸ்,
நெல்லியடி.

கே: கிளிநொச்சி ப. ச: தேர்தலிலும், கரைச்சி கி.ச: தேர்தலிலும் தமிழரசு அமோக வெற்றியீட்டியது எதைக் குறிக்கிறது?

ப: ஆனந்தசங்கரியின் பாடு அதோகதியாகி வருகிறதென்பதை!

ஃ

கே. கே. என். கந்தையா,
நீர்கொழும்பு.

கே: தமிழ் காங்கிரஸ் பா. உ.க்கள் சிவப்புபட்டி அணிகிறார்களாமே உண்மையா?

ப: ஆமாம் தாங்கள் தமிழினத்தின் அபாய விளக்கு என்பதை இப்படி வெளிச்சம் போட்டு தாங்களேகாட்டிக் கொள்ளுகிறார்கள்.

கே: தமிழ் காங்கிரசின் தற்போதைய தலைவர் யார்?

ப: ஜீ. ஜீ. பொன்னம்பலம் அல்ல—என்று கூறிவிட்டார் அருளம்பலம்!

கே: இன்றைய அரசாங்கத்தால் நன்மை அடைவோர் யார்?

ப: நீலம், சிவப்பு சால்வைகள் விற்கும் புடவை வியாபாரிகள்!

ஃ

ஈழத்துமணி,
திருமலை.

கே: ஒரு நாட்டின் பல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு சமஷ்டி அரசியலமைப்பு வழியே சிறந்தது எனகனடா பிரதமரும் கூறியுள்ளாரே—சிங்கள சோசலிசம் பேசும் ஆட்சியாளர்களின் சிந்தனையில் அது பதியுமா?

ப: உண்மையாகத் தூங்குபவனை எழுப்பலாம் - தூங்குவதுபோல பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியுமா?

ஃ

சி. சிவதாஸ்,
தொண்டமானாறு.

கே: திரு. ஆலாலசுந்தரம் 'தரப்படுத்தல்' பற்றி விவாதிக்க பொதுமேடைக்கு வரும்படி விடுத்த சவாலை வி. பொன்னம்பலம் ஏற்பாரா?

ப: எப்படி ஏற்பார்? பொதுமேடை விவாதங்களால் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாதென கூறி 'நைஸாக' பின் வாங்கிவிட்டாரே!

ஃ

காவலூரான்,
வேலணை மேற்கு.

கே: த. கா. பா. உ.க்கள் ஆலாலசுந்தரத்தின் சவாலை ஏற்று பொதுமேடை ஏறுவார்களா;

ப: சிங்கத்தின்முன் தோன்றுவதற்கு சிறு நரிகளுக்கு எங்கே தம்பி 'மதுகெலும்பு!

ஃ

பொ. கலைச்செல்வி.
ஏழாலை;

கே: அருளம்பலம், தியாகராசா, ஆனந்தசங்கரி ஆகியோரின் தற்போதைய தலைவர் யார்?

ப: திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா!

கே: குமாரசூரியர் வடக்கில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு ஏதோ நடவடிக்கை எடுக்கிறாராமே!

ப: ஆமாம், ''வழியிற் தேங்காயெடுத்து தெருவில் பிள்ளையாருக்கு உடைக்கும்'' கைங்கரியத்தில் அவர் ஈடுபட்டிருக்கிறார்! தமிழ் மக்களுக்கென தமிழ் பிரதேசத்தில் அரசாங்க செலவில் தனியொரு பல்கலைக் கழகத்தைக் கட்டித்தரும் ஆற்றலின்றி தமிழ் மக்களுக்கு மட்டுமேயுரிய பரமேஸ்வராக் கல்லூரி, கோப்பாய் மகளிர் பயிற்சிக்கல்லூரி போன்றவற்றில் 'பல்கலைக்கழகம்' என்ற பெயரில் ஏதோ ஒன்றை ஏற்படுத்தி, சிங்கள மாணவர்களும் அங்கு படிப்பதற்கு வசதிசெய்துகொடுக்கப்போகிறாராம்!

கே: வடக்கில் ஐ.மு. அரசு நிறுவப்போவதாக தம்பட்டமடிக்கும் பல்கலைக்கழகம் தமிழருக்கு மட்டுமா?

ப: இல்லை—வடமத்திய மாகாணத்திலுள்ள சிங்களவருக்கும் சேர்த்துத்தான் என்பதை அமைச்சர் குமாரசூரியரும் இலங்கரத்தினவும் யாழ்ப்பாணத்தில் கூறிவிட்டார்களே!

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> 194ஏ, பண்டாரநாயக்கா வீதி
> கொழும்பு—12

கே: தினகரன் வாரமஞ்சரியின் முதல் பக்கத்துக்கும குமாரசூரியருக்கும் என்ன சம்பந்தம்?

ப: ஏன், தினகரன் வாரமஞ்சரி முதல் பக்கத்தை குமாரசூரியர் சொந்தமாகத்து எடுத்துவிட்டாரென்று நினைக்கிறீர்களா?

ஃ

சி. நடராசா,
கொடிகாமம்.

கே: சுதந்திரன் ஆசிரியர் சிறையில் தள்ளப்பட்டிருந்தால்...?

ப: சிறையனுபவங்கள் பற்றி சுதந்திரன் வாசகர்களுக்கு சுவையான தொடர் கட்டுரை கிடைத்திருக்கும்!

ஃ

கி. இராசாமி,
கொழும்பு.

கே: [illegible]கழகத்தாருக்கு சுய சிந்தனையுண்டா?

ப: எப்படியிருக்கமுடியும்... அவர்கள் 'விடுதலை' என்றொரு பத்திரிகை நடத்துகிறார்களே, அதுகூட அவர்களது சுயசிந்தனையில் பிறந்த பெயர் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? தமிழ் நாட்டில் தன்மானத் தந்தை பெரியார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு 'விடுதலை' என்றோர் நாளிதழ வெளிவந்துகொண்டிருக்கிறது. அதைப்பார்த்து 'காப்பி' அடித்து பெயர் வைத்தவர்களிடமா சுய சிந்தனை இருக்கமுடியும்?

# அண்ணா காவியம்

காசி ஆனந்தன்

## பெரியார் எழுச்சி

ஆரடா வட நாட்டானா?
இந்தி அனுப்பினானா?
தமிழ் அழித்தானா?
பாரடா தமிழா நீயோா
பேயன் என நினைத்தான்...
படு மடையன் காண்!
சேரடா படை சேர்த்திடுக!
இன்றே செருக்களத்தில்
நுழைந்து நாம் செய்வோம்
போரடா! தமிழ் மானப் போர்!
வெம்போர்! எனப் பெரியார்
புயல் வெடித்தாரே!

நாடெல்லாம் எழுக! நந்தம்
தாயை நசுக்க வந்தார்
கொடு நரிக்குலத்தார்!
ஈடிலாத் தமிழிருக்க
இந்தி கொணர்ந்தார்...கண்டாய்!
தமிழனே... எழடா
பாடெலாம் பலபட்டன்றோ
முன்னைப் பழங்குலத்தோர்
தமிழ் வளர்த்திட்டார்!
பேடியே! அட சும்மா நீ
இருந்தாய்...பிண்டம் எனக்கண்
சிவந்தனர் பெரியார்!

சோழனைச் சேரன்றன்னைப்
பாண்டியனைச் சீர்பாடிப்
பொழுது தொலைத்தோம்!
சூழவரும் இன்னல் ஓட்டித்
துரத்த இயலாச் சோற்றுப்
பிறவிகளுக்கு
சோழனேன் சேரனேன் சீர்
பாண்டியனேன் சும்மாவாய்
சுழற்றியடித்துக்
கோழையே வாழ்ந்தனை நீ
என்று குமுறிப் பெரியார்
கொதித் தெழுந்தாரே!

ஏனடா தமிழா! மானம்
எங்கே? எவன்கொண்டு போனான்?
வடவரின் இந்தி
ஏனடா? இராசகோபா
லாச்சாரியார் துரோகம்
இனிக்கிற தோடா?
ஏனடா பாவி! இனப்பற்
றெங்கே? மொழிப்பற்றெங்கே?
எழுந்திடா துறங்கி
ஏனடா இருந்தனை இன்னும்?
ஏடா! எனவாங்கு சீறி
இரைந்தனர் பெரியார்!

வீரமென் றொன்றை அட நீ
வெங்காயமே! மறந்தாய்!
வெறும் மரமானாய்!
ஆரெது செய்திடினும் போய்
அன்னார் அடிநக்கும் நாய்
இனமென ஆனாய்!
சீரெலாம் தானாய் உருவெ
டுத்தாள் தமிழாம் அன்னை
உயிர் சிதையுங் கால்
ஓரடி கொடுக்க இயலாக்
கோழை! என்றே பெரியார்
உறுமினார் அம்மா!

மாமலைத் தோள்கள் உடையாய்!
தமிழனே! அடஉன் மார்பில்
புகழ்மலை குவித்து
நாமருந் தமிழ்காத்த கூட்டம்
என நாளையோர் வாய் புகழச்
செருநடை கொளடா!
தேமதுரத்தீந் தமிழைத்
தீண்டினார்... நீ இனியும்
செயலிழந் திங்கே
ஊமையாய் இருப்ப தென்ன
நீதி? எனப்பெரியார் ஓர்
முரசமார்த் தாரே!

சீறினார் பெரியார்! இந்தி
வெறிக் கூட்டங்கள் ஓடிக்
கலங்கிடச் சினந்து
நூறுபல் லாயிரம் பேர்
தமிழர் திரண்டார்! நொடியில்
எழுந்தோர் தானை!
ஏறெனக் கிளம்பி நாட்டின்
இளைஞரிடை போய்க் காஞ்சி
இளம்புலி வீரன்
ஆறெனப் பொங்கி வழியும்
வீரத் தமிழ் அடுக்கி
உரம் படைந்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கைதி ஆனது ஏன்?

**கோவை-மகேசன்**

இந்நாட்டிலுள்ள சட்டங்களில் அதிபயங்கரமான சட்டம் அவசரகாலச் சட்டம் என்று அழைக்கப்படும் பொதுஜனபாதுகாப்பு சட்டமாகும். இச்சட்ட விதிகள் நடைமுறையிலிருக்கும் காலத்தில் சனநாயகம் புதைகுழிக்கு அனுப்பப்பட்டுவிடும். தாம் நினைத்தபடி நடக்கும் சம்பூரண ஏதேச்சாதிகாரத்தை அரசாங்கத்துக்கு தருவன அவசரகாலச் சட்டவிதிகள் தாம்.

அவசரகாலச் சட்டவிதிகள் நடைமுறையிலிருக்கும் காலத்தில் ஆட்சியாளர்கள் எவரையும் கேள்விமுறையின்றி கைது செய்திடவும் காவலில் வைக்கவும் முடியும். தனது அரசியல் எதிரிகளை பழிவாங்கிடவும் இச்சட்ட விதிகளைப் பயன்படுத்த அரசாங்கத்தினால் முடியும்.

இந்நாட்டு தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அவசரகாலச் சட்டம் அவர்களுக்கு நன்கு பரிச்சியமான பழகிப்போன ஒன்ருகிவிட்டது; அவசரம் இல்லாத நேரங்களில் அவசரகாலச் சட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியதையும் அவசரமான நேரங்களில் அச்சட்டத்தை பிரகடனப்படுத்தாது கண்மூடி இருந்ததையும் கடந்த காலங்களில் நாம் நிதர்சனமாகக் கண்டிருக்கிறேம்.

தமிழ் பேசும் மக்களின் இன எழுச்சியையும் உரிமைப் போராட்டங்களையும் நசுக்குவதற்கு அரசாங்கத்திடமுள்ள ஒரேயொரு இறுதி ஆயுதம் இந்த அவசரகாலச் சட்டமாகத்தான் இன்று இருக்கிறது.

1958ம் ஆண்டை நினைத்துப்பார்க்கிறேன்—மே, ஜூன் மாதங்களில் சிங்கள இலங்கையெங்கணும் விஸ்வரூபமெடுத்து ஆடிய பயங்கர இன வெறிக்கொடுமைகள் என் நெஞ்சத்திரைக்கு வருகின்றன.

சிங்களவர்களிடையேயுள்ள தீவிர இன வெறியர்கள் மனிதத்தன்மையையே இழந்து மிருகங்களாக மாறி தமிழர்களை சங்காரம் செய்த நேரம். எதிர்பாராத தாக்குதலால் தமிழர்கள் தடுமாறிப் போயிருந்த வேளை—

தமிழன் கண்ட கண்ட இடத்திலெல்லாம் நையப்புடைக்கப்படுகிருன்! வெட்டிப் புதைக்கப்படுகிருன்!!

தமிழனின் சொத்துக்கள், பொருட்கள், கடைகள், வீடுகள் அனைத்தும் சூறையாடப்படுகின்றன!!

பாணந்துறையில் சைவ மதக் குரு ஒருவர் உயிருடன் பெட்ரோல் ஊற்றி கொழுத்தப்பட்டு துடிதுடித்து இறக்கிருர்!

தமிழ் நங்கையரின் கற்பு காம வெறிபிடித்த மிருகங்களால் உறிஞ்சப்படுகின்றன.

நாட்டின் பாதுகாவலர்களாக அன்றிருந்தவர்கள் இதுபற்றி அக்கறை ஏதுமின்றிவாளாஇருக்கிருர்கள். பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயகா சங்கானைப் புதைத்தபடி—அமைதியாக இவற்றைப் பார்த்தபடி இருக்கிருர்.

ஏறத்தாழ இருபத்து நான்கு மணி நேரம் தமிழன் பயங்கர வாழ்க்கையை அனுபவிப்பதை பார்த்து 'ரசித்த' பின்புதான் 'அவசரகாலச் சட்டம்' அன்று சிங்கள ஆட்சியாளரால் பிறப்பிக்கப்பட்டது!

இருபத்து நான்கு மணி நேரம் கழித்து — அதுவும் பலரின் நெருக்குதலினால் அன்று பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்னரே பிறப்பிக்கப் பட்டிருக்குமானல், நாட்டில் தமிழர்கள் வேட்டையாடப் பட்டிருக்கமாட்டார்கள்; இலங்கையின் வரலாற்றில் அழியாத வடுவாக அமைந்துவிட்ட 1958 இனக்கலவரமும் நிகழ்த்திராது!

இந்த உண்மையை இன்று நிதியமைச்சராக இருக்கும் டாக்டர் என். எம். பெரேரா, அன்று எதிர்க்கட்சியிலிருந்த போது சுட்டிக் காட்டியிருந்ததை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

அவசரகாலச் சட்டவிதிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கு முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது 1961ம் ஆண்டிலாகும்.

1961ம் ஆண்டு சிறிமா அம்மையாரின் ஆட்சி சிங்களத்தை திணிக்க முயன்றதை எதிர்த்தும் தமிழே ஆட்சிமொழியாக வேண்டும் என்று கோரியும் தமிழ் இலங்கை முழுவதும் உலகமே வியக்கத்தகும் மாபெரும் அறப்போராட்டம் தமிழரசுக் கட்சியின் தலைமையில் இரு திங்களாக நடைபெற்றது வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட சம்பவமாகும்.

இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களிடையே எழுந்த ஒன்றுபட்ட பேரெழுச்சிக்கு முன் தாக்குப்பிடிக்க முடியாத அரசாங்கம், இறுதியில் போராட்டத்தை நசுக்கப் பயன்படுத்தியதும் இதே அவசரகாலச் சட்டவிதிகள் தாம்.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் என் நினைவுக்கு வருகிறது - இரவு மணி பன்னிரண்டு இருக்கும். கச்சேரிவாசலிலே உணர்ச்சி மிகு பாடல்களைப் பாடியபடி தவமிருக்கிருர்கள் தமிழ் மாதர்கள் — வைராக்கியம் நிறைந்த நெஞ்சுடன் கொட்டும் பனியையும் தாங்கியபடி; தமிழ் இளைஞர்கள், முதலியோர்கள் நூற்றுக் கணக்கில் கச்சேரிவாசலையடைத்திருக்கிருர்கள்.

திடீரென்று எங்கிருந்தோ வந்துநிற்கின்றன இராணுவ ட்ரக்குகள் — சத்தியாகிரகிகளோ அசைந்துகொடுக்கவில்லை—சத்தியாக்கிரகப் போராட்ட வீரர்களின் மண்டைகளிலும், நெஞ்சிலும், முதுகிலும், காலிலும, கையிலும், இராணுவ வீரர்களின் பூட்ஸ் காலும்—துப்பாக்கியில் பொருத்தப்பட்ட கத்தியும், துப்பாக்கிப்பிடியும் 'பதம்' பார்க்கின்றன; அடித்து துன்புறுத்தி தூக்கிக் கொண்டுபோகிருர்கள் அறப்போராட்ட வீரர்களை! காரணம் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதுதான்! என் முதுகில் அன்று நான் வாங்கிக் கொண்ட அடியையும் இன்றும் மறக்க முடியவில்லை.

இப்படி, அவசரகாலச் சட்டம் என்பது இந்நாட்டில் தமிழனின் உரிமைப் போராட்டங்களையும், தொழிலாளர்களின் வேலை நிறுத்தக் கிளர்ச்சிகளையும் நசுக்குவதற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது;

அவசரகாலச் சட்ட விதிகள் சுதந்திரனுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டதும் இதுவே முதல்தடவையல்ல;

1958ம் ஆண்டு சுதந்திரனின் குரல்வளை அவசரகாலச் சட்டவிதிகளால் நசுக்கப்பட்டிருந்தது.

1961ம் ஆண்டும் சுதந்திரன் அவசரகால விதிகளின் கீழ் தடைசெய்யப்பட்டிருந்தது;

சுதந்திரனின் குரலுக்கு—சுதந்திரன் எழுப்பும் தமிழின விடுதலை உணர்ச்சிக்கு—சிங்கள் ஆட்சிபீடம் எத்துணை அஞ்சி நடுங்குகிறது என்பதற்கு இருதடவைகள் சுதந்திரன் தடைசெய்யப்பட்டதே தக்க சான்ருக விளங்குகிறது அல்லவா?

சுதந்திரனின் குரல்வளையை நசுக்குவதின்மூலம், சுதந்திரனின் செல்வாக்கையும், சுதந்திரனின் வளர்ச்சியையும், தடுத்து நிறுத்தி சுதந்திரனை வெளிவராமற் செய்துவிடலாம் என்று இரு தடவைகள் சிங்கள அரசு முயற்சியெடுத்துப் பார்த்தது. கிடைத்தது தோல்விதான். தமிழ் மக்கள் தரும் பேராதரவினால் சுதந்திரன் தன் பணியைத் தொடர்ந்தும் செய்துகொண்டே வருகிறது.

இந்நாட்டிலே ஆட்சியாளரால் இருதடவைகள் அரசியல் காரணங்களுக்காக தடைசெய்யப்பட்டதுஎன்ற பெருமை சுதந்திரன் ஒன்றுக்கு மட்டுமே உண்டு என்பதையும் நான் இவ்விடத்தில் குறிப்பிடத்தான் வேண்டும்!

1958ம் ஆண்டிலும், 1961ம் ஆண்டிலும், அவசரகாலச் சட்டத்தின் கீழ் சுதந்திரன் பத்திரிகையையே தடைசெய்த அதிகாரவர்க்கத்தினர், இம்முறை ஒரு மாற்றத்தைச் செய்துள்ளனர்—அதாவது சுதந்திரன் பத்திரிகையைத் தடை செய்யாது சுதந்திரன் ஆசிரியரைக் கைது செய்ததுதான் அந்த மாற்றமாகும்.

காகமும் இருக்க பனம் பழமும் விழுந்தது என்று கூறுவார்களே அதுபோல பழைய நூறு, ஐம்பது ரூபா நோட்டுக்களை செல்லாமல் செய்வது சம்பந்தமாக 1970 அக்டோபர் 26ம் நாள் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால சட்டவிதிகளை என்மீது ஏவி விடுதற்கு அரசாங்கத்துக்கு ஒரு சமாதானமாக அமைந்தது ரூபா நோட்டு மாற்றம் பற்றி அக்டோபர் 29ம் திகதி சுந்திரன் இதழில் வெளியிடப்பட்டிருந்த அந்த முன் பக்கமுகப்புச் செய்தி.

அரசாங்கவட்டாரம் முழுவதையுமே ஒரு கலக்கு கலக்கி விட்டது அந்தச் செய்தி.

—தொடரும்.

## ஆலாலுவின் சவாலும் வ. பொ. வின் மழுப்பலும்

'தரப்படுத்தல்' என்னும் இனவெறித் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களின் கழுத்தறுக்கப் பட்டிருக்கிறது—தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது—என்கிறது தமிழரசுக்கட்சி.

இல்லை, இல்லை-தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் திட்டத்தில் தீமையேதும் விளையவில்லை—பாகுபாடு ஏதுமில்லை—தரப்படுத்தல் தமிழர்க்கு நன்மையே செய்துளது என்கின்றனர் அமைச்சர் குமாரசூரியர், வீ. பொன்னம்பலம். ஆனந்தசங்கரி, தியாகராஜா அருளம்பலம் ஆகியோர்!

வாருங்கள் பொதுமேடைக்கு — தமிழ் மாணவர்க்கு அநீதி செய்யப்பட்டுள்ளதென்பதை புள்ளி விபரங்களுடன் நிருபித்துக் காட்டுகிறேன் என்று சவால் விடுத்தார் அடலேறு ஆலாலசுந்தரம்—

ஆலாலசுந்தரம் சவால் விடுத்து 23 நாட்களாகியும் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்தனர்.

இப்போது.........!

ஆலாலசுந்தரமா? — ஐயய்யோ வேண்டாம்—வேறு யாராவது தமிழரசு எம. பி. யுடன் என்ருல் பேசலாம் என்று கூறி நழுவுகிருர் சிமோல் அருளம்பலம்!

பாராளுமன்றத்தில் 'தரப்படுத்தல்' திட்டத்தை தமிழரசார் கண்டித்துப் பேசிடவில்லையென்கிருர் சிமோல் அருளம்பலம்' தமிழரசுக்காரர் பேசியபோது சிமோல் என்ன செய்து கொண்டிருந்தாரோ யாருக்குத் தெரியும்?

வ. பொன்னம்பலமோ, பொதுமேடை விவாதங்களால் என்ன பயன்—என்று வரட்டு தத்துவம் பேசி தம் இயலாமையை மறைத்திடப்பார்க்கிருர்!

சிங்கள மக்களுடன் ஒத்துழைத்துத் தான் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாம் வ. பொ.!

வ. பொ. வும், குமாரசூரியரும் மற்றையோரும் சிங்களவருடன் ஒத்துழைத்து பெற்ற பிள்ளை தானே 'தரப்படுத்தல்' என்னும் தமிழ் மாணவர்களின் கழுத்தறுப்புத் தத்துவம்!

இன்னும் ஒத்துழைத்து தமிழினத்துக்கு எதனைப் பெற்றுக்கொடுக்கப் போகிறீர்கள்?

தரப்படுத்தல் திட்டத்தை—பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தமிழனுக்கு கூடிய புள்ளி; சிங்களவனுக்கு குறைந்த புள்ளி என்று கூறும் காட்டுமிராண்டித் தத்துவத்தை—ஒத்துழைத்து உங்களால் அகற்றிவிட முடியுமா?

வ. பொ. அவர்களே ஒரு மாசம் கெடுதருகிறேம்-அதற்கிடையில் ஒத்துழைத்து தரப்படுத்தல் திட்டத்தை ஒழித்துக் கட்டுங்கள் பார்ப்போம்! உங்களால் அது முடியாதென்பதை இப்போதே கூறிவைக்கிறேம்!

—கோவை

## பல்கலைக்கழகத்தில்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்மநாதன் அவர்கள் தாம் கண்டுபிடித்த வன்னியரின் வரலாற்றிற்கு முக்கியமாயுள்ள இரு பட்டங்களையும் சேர்த்து 'வன்னியர்' என்ற, இலங்கையிலே உள்ள பல்கலைக்கழகங்களில் வரலாற்றுத் துறையிலுள்ள தமிழர்களால் இதுவரை காலமும் எழுதப்படாதவாறு சிறந்ததொரு நூலை எழுதியுள்ளார்.

அந்த இரு பட்டயங்களையும் முதன்முதலில் ஆய்ந்த பெருமை இவருக்குப்போய் விட்டதைக் கண்டு பொருமை கொண்ட வரலாற்று விரிவுரையாளர், தற்காலிகமாக கடமையாற்றும் ஒரு குட்டி விரிவுரையாளரைத் தூண்டிவிட்டு இரு பட்டயங்களையும் திருடிக் குட்டியின் பெயரில் வெளியிட முயற்சி எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

உயர்ந்த அறிவுப் பீடமாயுள்ள பேராதனை பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் நடைபெற்ற இந்த மோசடி வரலாற்றுப் பீடத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமது மோசடி வெளியாகிவிட்டதை அறிந்த இரு விரிவுரையாளர்களும் பேராதனையிலுள்ள ஏனைய தமிழ் விரிவுரையாளர்களெல்லாம் சிங்களத்திற்கு எதிராக வேலைசெய்கிருர்கள் என்ற பொய்ப் பிரசாரத்தைச் செய்து பல்கலைக்கழகத்தின் உயர் பீடத்தில் அதுவும் சிங்கள அதிகாரிகள் மத்தியில் நல்ல பெயரைப் பெற்று தாம் செய்த மோசடியை மூடி மறைக்க முயலுவதாயும் தெரியவருகிறது.

## கோப்பாய்க் கோமான் சிலைக்கு இடம் ஒதுக்கீடு !

கிளிநொச்சிப் பட்டின சபை, கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் சிலை நிறுவுவதற்கென கரடிப்போக்குச் சந்தி வாசிகசாலை எல்லைக்குள் இடம் ஒதுக்கியுள்ளது.

அமரர் வன்னியசிங்கம் சிலை திறப்பு விழாவை அதிவிமரிசையாக நடத்துவதற்கு அடலேறு மு. ஆலாலசுந்தரம் ஏற்பாடுகள் செய்து வருகிருர்!

வன்னியனூர் சிலை உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து ஊர்வலமாக கோப்பாய் நல்லூர், உடுவில், யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஊடாக கிளிநொச்சித் தொகுதிக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனையோரது மொழி, கலை, கலாச்சாரங்களை நசுக்குவதால் ஒருமைப்பாடு தோன்ருது!

## இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பது; இன்பத் தமிழைப் பாதுகாப்பது!

### இதுவே தி. மு. க.வின் பிறவிப் பயன்!

"தமிழ் இனம், தமிழ்மொழி, தமிழ் மரபு இவைகளைக்காத்து வளர்க்க வேண்டுமென்ற அண்ணனின் வாசகங்களே தி. மு. க. வின் வேதமாக—அண்ணன் இட்ட கட்டளையாக இருக்குமென்பதை அழுத்தந் திருத்தமாக பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்."

"ஆனல் அதே நேரம் இந்திய ஒருமைப்பாடு என்பது வெவ்வேறு மொழி, கலை, கலாச்சாரம ஆசியவற்றை உருத்தெரியாமல் ஆக்கி புதிதாக உருக்கி வார்க்கப்படும் வார்ப்படமல்ல. ஆங்காங்கே ஆரோக்கியமான சூழ்நிலையில் அவை வளர இடமளித்தால் தான் இந்திய ஒருமைப்பாடு மேலும் வலுப்பெறும் என்று நம்புகிறோம். "யூனியன்" என்கிற ஒற்றுமை தான வலுவான இந்தியாவை உருவாக்குமேயல்லாது வெவ்வேறு மொழி கலை கலாச்சாரங்களை அடையாளம் தெரியாமல் மாற்றி உருவாக்கப்படும் ஒன்றிப் போன தன்மை என்பது, வலுவான இந்தியாவுக்கு ஆக்கமளிக்காது என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறும்"

பதே தி. மு. கழகத்தின் இலட்சியமாக இருக்கும்.

அதற்காக தமிழகத்திலும் இந்தியாவிலும் இத்தகு இலட்சியம் கொண்ட சக்திகளுடன் தி. மு. கழகம் ஒத்துழைக்கும்;

அதே நேரம்; தமிழகத்தைப் பொறுத்த வரையில் தி. மு. கழகத்தைத் தங்களுக்குப் பாதுகாப்பான மெய்க்காப்பாளனுகவும், தங்களுக்குப் பணியாற்றும் ஊழியனுகவும், தங்கள் வீட்டில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்காகவும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிருர்கள் என்பது காலத்தால் கழகத்தின்மீது சுமத்தப்பட்டிருக்கும் ஒரு பெரும் பொறுப்பாகும்.

#### தமிழ் மரபு

"தரணி புகழ வாழ்ந்திருந்த புகழ்பெற்றது தமிழ் மரபு! மற்ற நாடு

...அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்றவகையில் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும்...வெறும் அரசியல் நடத்த — 67-ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்— 67-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டு காலத்திற்காவது நமது பணி இருக்கிறது என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப்பதிய வேண்டும்— இந்தத் தமிழ் மரபு வளர்வதற்கு இடையூருக ஆட்சியாளர் குறுக்கிடுவதால்தான் நாங்கள் அரசியலில் ஈடுபடுகிறோம்."

—என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் 30-12-66ல் விருகம்பாக்கம் மாநாட்டில் தனது தலைமையுரையில் வேங்கையென முழங்கியது இன்னும் நம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது;

#### ஒருமைப்பாடு

தமிழ் இனம்-தமிழ்மொழி—தமிழ் மரபு — இவைகளைக் காத்து வளர்க்க வேண்டுமென்ற அண்ணனின் வாசகங்களே தி. மு. க.வின் வேதமாக; அண்ணன் இட்ட கட்டளையாக இருக்குமென்பதை அழுத்தந்திருத்தமாகப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

ஆனல் அதே நேரம், இந்திய ஒருமைப்பாடு என்பது வெவ்வேறு மொழி— கலை —கலாச்சாரம் ஆகியவற்றை உருத்தெரியாமல் ஆக்கிப் புதிதாக உருக்கி வார்க்கப்

(11-ம் பக்கம் பார்க்க)

இவ்வாறு தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டி தமிழக மக்களுக்கு விடுத்துள்ள அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது.

## தி. மு. க. தேர்தல் அறிக்கை

தி. மு. கழக அரசு தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய பின், பொருளாதார, சமூக பிச்சினைகளில் தமிழகத்துக்கு கழகம் ஆற்றிய சேவைகளைப் பற்றியும், எதிர்காலத்தில் ஆற்றவிருக்கும் தொண்டுகள் பற்றியும் விளக்கம் தரப்பட்டுள்ள இத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கிய பகுதிகள் வருமாறு—

கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு எனும் பொன்மொழி; புகன்று திராவிடக் கலாசாரத்தின நாயகருள் ஒருவராகத் திகழ்ந்து, "இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற தமிழர்" எனப் போற்றப்பட்டு, "மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாடு வாழவும் நலிவுகள் தீரவும் மக்களின் உரிமைக் குரலை எதிரொலிக்கும் பாசறையாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவி, பதினெட்டே ஆண்டுகளில் தமிழகத்தை ஆளும் கட்சியாக ஆக்கி, நம்மையெல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் மிதக்க விட்டு, மீளாத்துயில் கொண்டு விட்ட அறிஞர் அண்ணு அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அவர் வகுத்தகொள்கைகளையும் கண்ட கனவுகளையும் செயல்படுத்துவதற்கு இது வரையில் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நினைவுபடுத்தி, மேலும் மேற்கொள்ள இருக்கும் முயற்சிகளுக்கு உருக்கொடுக்கத் திட்டமிடும் இந்தத் தேர்தல் அறிக்கையைத் தி. மு. கழகம் உங்கள் முன் வைக்கிறது.

சமுதாய சீர்திருத்தத் தொண்டு — கலாச்சார வளர்ச்சிப் பணி—ஆகிய பல்லாண்டு காலப் பின்னணியோடு 1949-ம் ஆண்டு துவங்கிய தி. மு. கழகம், எதிர்க்கட்சியாக இருந்தபோது ஏற்ற கொள்கைகளுக்காகத் தீரமிக்க போராட்டங்களை நடத்தி, கொடிய அடக்குமுறைகளுக்கு ஆளாகி, பல தீரர்களைப் பலிகொடுத்து, "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" எனச் சிந்துபாடிச் சிறைவாசங்களை ஏற்று, தமிழகப் பொது மக்களால் தங்களுக்குப் பாதுகாப்பான ஒரு ஆயுதமாக ஆக்கப்பட்டு, சென்ற 1967 பொதுத் தேர்தலில்—எதிர்க்கட்சியாகப் போராடும் நிலையிலிருந்து ஆளுங்கட்சியாக அமைந்து ஏற்றுக்கொண்ட இலட்சியங்களைச் செயல் படுத்தும் நிலைமைக்கும், மத்திய அரசோடு தமிழகத்திற்காகப் போராடும் நிலைமைக்கும் மக்கள் சக்தியினுல் மாற்றப்பட்டது, தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மகத்தான நிகழ்ச்சியாகும்.

#### கட்டளை

தி. மு. கழகம், எந்தத் தேர்தல் அறிக்கையை மக்களின்முன் வைத்து அவர்களின் அன்பான கட்டளையை ஏற்று 1967-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோ அந்தந் தேர்தல் அறிக்கையில் பெரும் பகுதியினை நிறைவு செய்திருக்கிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என்பது அரசியல் உலகில் அபூர்வமானது என்பதும், அந்த வாக்குறுதிகளில் பலவற்றை அரசுப் பொறுப்பேற்ற தி. மு. கழகம் நிறைவேற்றியிருக்கிறதென்பதும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஒன்ருகும்.

#### இந்தி எதிர்ப்பு

● இந்தி ஆதிக்கத்தைக் கழகம் எதிர்த்துப் போராடும் என்று உறுதியளித்தது அந்தத் தேர்தல் அறிக்கை. தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் இரண்டும்தான்—இந்திக்குப் பள்ளிகளில் வேலையில்லை என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது:

● தமிழ் மொழியின் ஆக்கத்திற்குக் கழகம் பாடுபடும் என அறிவித்ததற்கேற்ப எங்கும் தமிழ்மணம் கமழச் செய்யும் முயற்சியில் வெற்றி பெற்று வருகிறது கழக அரசு.

#### தமிழ்நாடு

● தமிழ் நாட்டுக்கு "தமிழ்நாடு" எனப் பெயரிட வேண்டுமென அன்று கழகம் வற்புறுத்தியது. இன்று கழக அரசு அதனைச் செயலாக்கியது.

#### இருப்பு ஆலை

● சேலம் இரும்பாலை, கிழக்குக் கடற்கரை [illegible] சாலை, கல்பாக்கம் திட்டம், சென்னைக் குடிநீர் திட்டம், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் மற்றும் பல்வேறு தொழில் வளங்களைப் பெற்றிடப் பணியாற்றும் கழகமெனத் தேர்தல் வாக்குறுதி அளித்தது வீண் போகாமல் அனைவரும் மகிழத்தக்க வண்ணம் அவைகளைப் பெற்றுத் தந்துள்ளது கழக அரசு.

● வங்கிகள், பேருந்து வழித் தடங்கள் தேசிய மயமாக்க முயற்சிகள் எடுக்கப்படும் என அறிவித்ததற்கு ஏற்ப அதில் படிப்படியான வெற்றிச் சாதனையைக் கண்டிருக்கிறது கழக அரசு.

○ தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம் — தீண்டாமை ஒழிப்பு — ஆகியவற்றுக்காகத் திட்டங்கள் தீட்டும் கழகமெனத் தேர்தல் அறிக்கை கூறியது. அவர்களுக்கு எண்ணற்ற சலுகைகள் அளித்தது மட்டுமல்ல; தீண்டாமை ஒழிப்புக்கு மனமாற்றம் தேவை என்ற அடிப்படையில், கலப்புமணத் தம்பதிகளுக்கு அரசின் சார்பில் பரிசளிப்புப் பாராட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன;

○ சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கச் சட்டம் இயற்றுவோம் என்று கூறியதை மறவாமல், அதனைச் சட்டமாக்கிய பெருமை கழக அரசுக்கு உண்டு.

#### வள்ளுவர் நாள்

○ 1967 தேர்தல் அறிக்கையில் குறிப்பிடாத பல்வேறு நற்பணிகளையும், கழக அரசு செய்திருக்கிறது என்பதை எவரும் மறுத்திடார்.

○ வள்ளுவர் நாள்' நபிகள் பிறந்த தினம், மேதின விழா ஆகிய நாட்களை, அரசு விடுமுறை நாட்களாக ஆக்கியுள்ளது கழக அரசு.

● ஆகாஷ்வாணி, வானொலியானது ...

● "டால்மியாபுரம்" கல்லக்குடியானது...

—இப்படி எண்ணிறந்த அருஞ் சாதனைகள் நாலாண்டு காலத்தில் கழக அரசின் குன்ருத ஆர்வத்தின் விளைவுகளாகக் காட்சி தருகின்றன.

#### தி. மு. க. லட்சியம்

விஞ்ஞானயுகத்திற்கேற்ற சமதர்ம சமுதாயம் அமைப[illegible]

கள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு— எல்லையில் ஏற்படும் தொல்லைகள் நீக்கியதற்கும் முன்பு— அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படாததற்கும் முன்பு— அரச நீதிகளை வகுப்பதற்கும் முன்பு— காடுகளில் அவர்கள் உலவிக்கொண்டிருந்த போது —உலகமே வியந்து உச்சி மேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறிபெற்றுத் திகழ்ந்தது தமிழகம்!

## மார்ச் 3வது வாரத்தில் மாணவர் மலர்!

● 17-2-71 ல் வெளியிடப்படவிருந்த சுதந்திரன் மாணவர் மலர் மாணவர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க 18-3-71 ம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

'தரப்படுத்தல்' என்னும் இனவெறித் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களது நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. கல்வித்துறையில் தமிழ் மாணவர்கள் இலங்கை முழுவதும் ஒதுக்கப்படுகின்றனர். ஆசிரியர் பற்றுக்குறை, பாடசாலை இல்லாமை, மற்றும் கல்வி வசதிகள் செய்து கொடுப்பதில் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கிறது ஆட்சியென்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் ஓர் உண்மை.

இந்த உண்மைகளை புள்ளி விபரங்களுடன் எடுத்துக்காட்டி தமிழ் மாணவர்களின் குமுறலை எடுத்துக் காட்டுவதாக சுதந்திரன் மாணவர் மலர் அமையவிருக்கிறது!

## 18.3.71ல் சுதந்திரன் "மாணவர் மலர்" வெளிவரும்

இம்மலரில் இடம்பெறுவதற்கு ஏற்ற கட்டுரைகளை மாணவர்களிடமிருந்தும்மாணவர்களின் கல்விப் பிரச்சினையில் அக்கறைகாட்டும் அறிஞர்களிடமிருந்தும்எதிர்பார்க்கிறேம். தமிழ் மாணவர் பேரவையினர் சுதந்திரனின் முயற்சியை வரவேற்பார்கள் என்றும் இதற்கு முழு ஒத்துழைப்பும் தருவரென்றும் நம்புகிறேம்.

கட்டுரைகள் அனுப்பும் மாணவ மாணவிகள் தமது புகைப்படங்களையும் அனுப்பத் தவறவேண்டாம்! கட்டுரை கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 10-3-71

—ஆசிரியர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மலிங்கமே! தமிழர்களின் மானத்தைவிற்காதே!

## பொத்துவில் தொகுதித் தமிழரசுக் கிளையின் கண்டனத் தீர்மானம்!

திருக்கோவில்— தம்பிலுவில் தன்மானத் தமிழர்கள் வாழும் கிராமம். இக்கிராமத்தில் இ. ச. தலைவர் திரு. ந. தருமலிங்கம் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை நிறுவ எடுப்பதாக கூறப்படும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், இதுபற்றி அவரிடம் விளக்கம் கோர வேண்டுமென்றும் அண்மையில் பொத்துவில் தொகுதி தமிழரசுக்கிளை ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

திரு: தர்மலிங்கம் 1965ம் ஆண்டிலிருந்துஅடித்துவரும் சந்தர்ப்பவாத அரசியல் குத்துக் கரணங்கள் பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் இத்தீர்மான வாசகத்தின் இறுதிப்பகுதியில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது;

''சமீபத்தில் தமிழ் தின சரியொன்றில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர் என்று திரு: நடராசா தருமலிங்கம் அவர்கள் பெயர் குறிக்கப்பட்டு அம்பாறை மாவட்ட தமிழர்களின் விமோசனத்துக்காக ஆட்சியாளருடன் செயலாற்றுவதாகவும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இச்செய்தியை அடுத்து தம்பிலுவில் கிராமத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கிளையொன்றை அமைப்பதற்கு திரு. தருமலிங்கம் அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்துவ மனுப் பத்திரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இக்கிளையைத் திறப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களையும் பிரமுகர்களையும் இப்பகுதிக்குக் கொண்டு வந்து வரவேற்புகள் வைக்கவும் பெருமுயற்சி செய்து வருகிறார்.

மீண்டும் மீண்டும் அரசியல் விபச்சாரம் செய்து தன்சுய நலத்துக்காக தமிழ் மக்களை பகடைக்காய்களாக உபயோகித்து இப்பகுதியின் தமிழ் உணர்வுக்கும் பெயர் பெற்ற தியாகத்துக்கும் களங்கம் ஏறபடுத்தும் முயற்சியில் இவர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் தொகுதிக்கிளை வன்மையாகக் கண்டிப்பதுடன் இக்காரணங்களுக்காக அவரிடம் விளக்கம் கோர வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி கிளையொன்றை அமைத்து தமிழ் மக்களின் தன்மானத்தையும் இப்பகுதி மக்களின் அரசியல் நேர்மையையும் தமது வாக்குறுதிகளையும் செல்லாக்காசாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை திரு. தருமலிங்கம் அவர்கள் கைவிட்டுஇப்பகுதி மக்களின் தன்மான உணர்வுக்கு மதிப்பளித்து நடக்க முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன் இவ்விடயங்களை அவருக்கு அறிவித்து நியாயம் கோர வேண்டுமென்றும் குழு தீர்மானித்திருக்கிறது.

பிரேரணை முன்மொழிந்தவர்:- திரு: சு. குருநாத பிள்ளை வழிமொழிந்தவர்:- இ. கந்தையா.

## என். எம். பெரேராவே குத்துக்கரணமடித்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும், வட்டுக்கோட்டையின் முன்னால் பிரதிநிதியுமான திருவாளர். அ. அமிர்தலிங்கம் தம் உரையில் குறிப்பிட்டதாவது!-

தமிழர்கள் என்றும் கல்வியால் சிறந்து விளங்கினவர்கள். தமது கல்வித் திறனால் வெளி நாடுகளில் சென்றும் சீர்பெற்று விளங்கினவர்கள். தமிழரை இந்த நாட்டில் அடிமைகளாக்கி, கல்வியறிவற்றவர்களாக — தொழில் வாய்ப்பற்றவர்களாக ஆக்கவே இந்த அரசாங்கம் ''தரப்படுத்தல்'' என்ற போர்வையின் கீழ் தமிழ் மாணவர்களின் கழுத்தை அறுக்க முனைகிறது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கம் அமைச்சர் குமாரசூரியருக்கு ஒரு வரவேற்பு அளித்து, அதில் நானும் ஒரு பழைய மாணவன் என்ற முறையில் விசேசமாக அழைக்கப் பட்டிருந்தேன். அதில் கலந்து கொண்டு நான் உரையாற்றும்போது, அமைச்சர் குமாரசூரியருக்கு நான் சொன்னேன், ''தமிழ் மாணவர்களைத் தரம் பிரித்து ஒதுக்கும்இவ்வரசாங்கத்தின் இம்முயற்சியிலாவது நீங்கள் அரசாங்கத்திடம் கண்டிப்புடன் நடந்து தமிழ் மாணவர்களின் நிலையை எடுத்துக் கூறவேண்டும்'' என்று?

அமைச்சர் குமாரசூரியரும் ''தகுதிக்கான வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று கேட்பேன், இல்லையேல் நான் எனது பதவியை ராஜினாமாச் செய்வேன்'' என்று கூறினார். ஆனால் எதுவும் நடைபெறவில்லை. 'தரப்படுத்துதல்' என்றால் என்ன? என்பது பலருக்குத் தெரியாது.

### இதுதான் சோசலிசமா

அது என்ன? எப்படி நடைபெறுகிறது என்பது தெரியாமலே சிலர் அது, ''வசதி குறைந்த தமிழ் மாணவர்களுக்கு நல்லது'' என்கிறார்கள்; எது தமிழர்க்கு நன்மையளிப்பது? 'மெசிடிஸ் பென்ஸ்' காரில் சுகமாக வந்திறங்கி, சகல வசதிகளும் கொண்ட சென். தோமஸ் கல்லூரி, றோயல் கல்லூரிகளில் படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு 227 புள்ளிகளும்; பொருளாதார வசதிகள் எதுவும் இல்லாமல், கற்க வேண்டுமேயென்ற ஆவலில்-வசதிகள் குறைந்த கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஒரு தமிழ் மாணவன்250 புள்ளிகள் எடுக்கவேண்டும்' என்பதுதானு தரப்படுத்துதல்— தகுதியறிதல்! இது தான் சோஷலிசமா? இது தான் தமிழர்களுக்கு சிறந்த சலுகையா? வாய் கிழியச் சோஷலிஸம் பேசும் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் என்ன செய்திருக்கிறது?

காங்கேசன்துறைத் துறைமுகத்தால் பல இலட்சம் ரூபா வருமானம் வர வாய்ப்பு உண்டு. இத்துறைமுகத்திற்கு 50 ஆயிரம் ரூபா மாத்திரம் ஒதுக்கி வைத்திருக்கிறதாம் அரசாங்கம். கோடிக் கணக்கான செலவு வேண்டியிருக்கும்போது 50 ஆயிரம் ரூபா எதற்கு? இங்கு கொண்டு வந்த இயந்திர சாதனங்களைத் திருப்பிக் கொண்டு செல்வதற்காகவா?

எங்களுக்கு ஒரு கைத் தொழிற் பேட்டை அச்சுவேலியில் நிறுவுவதற்காக 10 ரூபா அடையாளமானியம் ஒதுக்கி வைத்திருக்கிறது. கச்சாய் உப்புக் குளம் பற்றி எதுவும் இல்லை. இப்படியே தமிழரின் பிரதேசத்தில் தமிழருக்கு நன்மை பயக்கக் கூடிய எதையும் ஒதுக்கி வைக்கிறது அரசாங்கம். இது தான் சோஷலிசமா?

மருத்துவ தொழில் நுட்ப நுண் ஆய்வாளர்களில் (M. L. T;) முப்பது பேரில் ஒரு தமிழர் கூட இல்லை. இது தான் சமதர்மமா?

ஒரு சில பிரதிநிதிகளினதும் அவர்களின் உறவினர்களினதும் சொந்த நலன்கள் தான் இன்று நிறைவு பெறுகிறது. இது இப்படியிருக்க திரு. வி: பொன்னம்பலம் தாம் ''புதிய பாதை''யைக் காட்டுவதாகக் கூறுகிறார். அரசாங்கத்துடன் இரண்டறக் கலந்து சுய தேவையைப் பூர்த்தி செய்து இனத்தைக் காட்டிக் கொடுப்பது தான் அவர்கள் காட்டும் புதிய பாதையா!

இத்தாலிய நாட்டின் சுதந்திரம் பெற வேண்டுமானால் என்னோடு வாருங்கள் என்று அழைத்துச் சென்ற கரிபால்டி காட்டியது ஒரு புதிய பாதையல்ல! பசி, பட்டினி, சாக்காடுதான்! இந்திய சுதந்திரத்திற்காக அண்ணல் காந்தி காட்டியதும் புதிய பாதையல்ல! அடி, உதை, சிறைவாசம் தான்!

மதராஸில் ஒரு தமிழ் நாட்டை உருவாக்கப் பேரறிஞர் அண்ணு காட்டியதும் புதிய பாதையல்ல; அதே பழைய பாதை தான்! புதிய பாதை — பழைய பாதை என்று இரண்டு பாதையில்லை எட்டப்பன் பாதை—கட்டப் பொம்மன் பாதை என்று தான் இரு பாதைகள் உண்டு!

### நாம் காட்டுவது கட்டபொம்மன் பாதை

எட்டப்பன் பாதை காட்டிக் கொடுக்கும் பாதை: கட்டப் பொம்மன்பாதை தூக்கிலிடப்படும் பாதை! வ. பொ: காட்டும் பாதை எட்டப்பன் பாதை; நாங்கள் காட்டும் பாதை கட்டப் பொம்மன் பாதை தான்! ஆனால் அது தான் சுதந்திரப் பாதை! ஒவ்வொரு தமிழ் இளைஞனும் கட்டப் பொம்மன் பாதையில் சென்று சுதந்திரம் காண வாருங்கள் என்றே அழைக்கிறோம்.'

வழக்கறிஞர் மு: ஆலால சுந்தரம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் குணராஜா, பருத்தித்துறை சிவா கிருஷ்ணமூர்த்தி, காரை நகரைச் சேர்ந்த இளைப்பாறிய வட்டார கல்வியதிகாரி எஸ். சபாபதிப்பிள்ளை, உடுவில் நா. உ. தர்மலிங்கம், பருத்தித்துறை நா. உ. க. துரைரத்தினம், பண்டிதர் இராசகுரு ஆகியோரும் உரையாற்றினர்.

தொகுப்பு:
(இளநங்கை.)

## தமிழியக்கம்

''தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்''

### தமிழ் புறக்கணிப்பு காட்சிக்கு தபாலமைச்சர் அழைக்கப்படுவார்!

தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சியினை 17-2-71 புதன் கிழமை வேலணைக் கிராமச் சபை மண்டபத்தில் நடத்த ஒழுங்கு செய்கின்றோம். இக் கண்காட்சியினைத் திறந்து வைக்குமாறு ஒரே ஒரு தமிழ் அமைச்சரான கௌரவ செ. குமாரசூரியரை அழைக்கவும் முடிவு செய்துள்ளோம்.

அன்றியும் ''ஏழை மகன் ஒருவனுக்கு தவறுதலாகச் சிங்களக் கடிதம் கிடைத்து விட்டால் பாராளுமன்றத்திலும் பகிரங்கக் கூட்டத்திலும் கடிதங்களைப் பறக்க விட்டு தமிழ் மொழி அழிகிறதெனக் கூக்குரல் இடுவார்கள் தமிழரசுக் கட்சியினர்'' என்று ஊர்காவற்றுறையிலே பேசிய அமைச்சர் மாண்புமிகு கே. பி. இரத்னயக்கா அவர்களைப் பிரதம விருந்தினராக இத் தமிழ் புறக்கணிப்புக் காட்சிக்கு அழைக்கப்போகின்றோம். சிங்களக் கடிதம் தவறுதலாக அனுப்பப்படுகின்றதா? தப்பித்தவறித் தமிழ்க் கடிதம் அனுப்பப் படுகின்றதாஎன்பதை அவர் நேரில் பார்க்க வாய்ப்பளிப்போம்.

இந்தக் கண்காட்சியில் வைப்பதற்குச் தனிச் சிங்களக் கடிதங்களையும் அறிக்கைகள் வெளியீடுகள் முதலிய வற்றையும் அனுப்ப விரும்பும் அன்பர்களை ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினருக்கு உடனே அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தமிழ்ப் பெருமக்களே!

தமிழை வாழவைக்க, தமிழ் உத்தியோகத்தர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க, தமிழ் தட்டச்சாளரை நியமனஞ் செய்விக்க உங்கள் அலுவல்கள் எல்லாவற்றையும் தமிழிலே செய்கின்றீர்களா?

O காசோலைகள் எல்லாவற்றையும் தமிழிலே எழுதுங்கள்.

O மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களைத் தமிழிலே நிரப்பி அனுப்புங்கள்.

O அரசாங்கத்துக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றையும் தமிழில் எழுதுங்கள்.

O விண்ணப்பப் பத்திரங்கள் எல்லாவற்றையும் தமிழில் எழுதுங்கள்

O இன்று தொடக்கம் அரசாங்கத்துக்கு எதனையும் ஆங்கிலத்தில் எழுதி அனுப்புவதில்லை என்று உறுதி செய்யுங்கள்.

இன்று அரசாங்கம் தமிழைப் புறக்கணிக்கின்றது. சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தமிழரை ஆளுகின்றது. ஆங்கிலத்துக்குக் கொடுக்கும் மதிப்பை—இடத்தைத் தமிழுக்குக் கொடுக்க மறுக்கின்றது. ஆங்கிலந் தெரிந்த சிங்கள உத்தியோகத்தரைக் கொண்டு தமிழரையும் ஆட்சி புரியச் சூழ்ச்சி செய்கின்றது. தமிழ் தெரியாத சிங்கள உத்தியோகத்தர்களைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புகின்றது. எல்லாவற்றையும் தமிழிற் செய்வதாக உறுதிபூண்டு இன்றே தொழிற் படுங்கள்.

வாழ்க தமிழ்!

### தமிழியக்கத் தொண்டர் முன்னணி உறுப்பினர் பட்டியல்

(163) சி. மகேந்திரன். கொழும்பு- 6, (164) க. லோகநாதன், கொழும்பு 2, (165) சி. இரத்தினவடிவேல், கொழும்பு 13, (166) கே ஈஸ்வரநாதன் கொழும்பு 15 (167) பொ. பெருமாள் கொழும்பு 13, (168) செ. குணசீலன் கந்தானை ஜா எல (169) க. குணசந்திரன் யாழ்ப்பாணம், (170) பொ. குகானந்தன் அரியாலை யாழ்ப்பாணம், (171) ஜெசிந்தா யோசேப்பு யாழ்ப்பாணம், (172) சி. ஞானசுந்தரம் கொக்குவில், (173) வே. குகானந்தா நெல்லியடி மேற்கு, (174) மு. இராமச்சந்திரன் மொரட்டுவ, (175) இ. நவரட்ணம் இணுவில்,

### தமிழியக்கத் தொண்டர் முன்னணி

தேர்தல் தொகுதி.......................................

முழுப்பெயர்:.......................................

முகவரி:.......................................

.......................................

வயது:..............................

கல்வித் தகைமை:.......................................

தொழில்: (மாணவராயின் படிக்கும் பாடசாலையின் பெயர்)

.......................................

தேதி:..............................

தமிழியக்க தொண்டர் அணியின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு எனக்கிடப்படும் பணியை இனிது நிறைவேற்றுவேன் என உறுதி கூறுகின்றேன்.

..............................

கையொப்பம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத் தமிழ் ஏடு சிந்தாமணியின் சிண்டு முடியும் சின்னத்தனம்!

## 'கல்கி'யைப் பழிக்க தமிழ்த் துரோகிகளாம் தினபதிக்கும்பலுக்கு என்னயோக்கியதை?

'இலங்கைத் தமிழைக் கிண்டல் செய்கிறது இறக்குமதியாகும் இந்திய சஞ்சிகை கல்கி' என்று முற்பக்கத்தில் கொட்டையெழுத்தில் தலையங்கந் தீட்டி எழுதுகிறது, 26-1-61 இல் வெளிவந்த சிந்தாமணி எனும் சிங்களவரின் தமிழ் ஏடு.

திருமதி நவரத்தினம் 18-19-20ம் திகதிகளில் தமிழ் நாட்டில நடந்த ஒரு சைவ மகாநாட்டில் கலந்து கொண்டு தமிழில் சிறு சொற்பொழிவும், ஆங்கிலத்தில் பேருரையும் நிகழ்த்தியுள்ளார் எனவும், அதையிட்டு கல்கியில் 'சிங்களத் தமிழ்' இனிமையாக இருந்தது' என்று எழுதப்பட்டிருந்ததெனவும் கூறி, பின்வருமாறு கல்கியைக் கண்டிக்கிறது இவ்வேடு.

'நாம் பேசும் தமிழைச் சிங்களத் தமிழ் என்று கூசாமல் எழுதும் கல்கியைப் பெரும் பணச் செலவில் இறக்குமதி செய்கிறோம்.

'நாவலர் என்றால் நாவலர் நெடுஞ்செழியனின் நினைவு தான் எமக்கு வரும் என்றார் ஆனந்தவிகடன் மணியம் அந்த மகானுபாவருடைய ஆனந்தவிகடனையும் விழுந்தடித்துத் தருவித்துக் கொள்கிறோம். உதைக்கும் காலைத் தூக்கி முத்தமிடுவதற்கு ஒப்பாகும் இந்த ஈனச் செயலை எந்தத் தன்மானமுள்ள தமிழனுவது செய்ய முடியுமா?

'எங்கள் தமிழைச் சிங்களத் தமிழ் என்பவர்கள், எங்கள் பெரியார்களைத் தாம் அறிவதில்லை என்று கூறுபவர்கள் இந்த நாட்டு எழுத்தாளர்களுக்கு தமது சஞ்சிகைகளில் இடமளிப்பார்கள் என்று இனியும் இங்குள்ளவர்கள் எவராவது எதிர்பார்க்க முடியுமா? அப்படி அந்தத் தமிழ் அபிமானி ஆத்திரத்தோடு கேட்டார்.! என்று யாரோ கேட்டது போல் முடிக்கிறாள் சிந்தாமணி.

அடேயப்பா, எவ்வளவு தமிழபிமானம், எவ்வளவு தமிழ் மேல் அக்கரை! யாருக்கம்மா, காது குத்துகிறாய்' என்று சிந்தாமணியைக் கேட்க விரும்புகின்றேன்.

ஈழத்தில், தமிழை, தமிழரை அழிக்க வேண்டும் என்று கங்கணங்கட்டியிருக்கும் பத்திரிகை நிறுவனமொன்றில் இருந்து சிதறி வரும் சிந்தனைகளைச் சுமந்து வரும் சிந்தாமணியே, நீயா எமக்குத் தமிழுணர்ச்சி ஊட்டுகிறாய்? எவ்வளவு காலமாகத் தமிழ் வளர்த்து, தமிழ் மணம் வீசி வரும் கல்கியை மறந்திடுங்கள் என் போன்ற—நுனிநாக்கில் நறுந்தேனும் நெஞ்சகத்தே கொடு நஞ்சும் கொண்டுள்ள சிற்றின்பக் கதைகளையும் சீரழிக்கும் செய்திகளையும் சிங்காரிக்கும் சிந்தாமணிகளைச் சிரசில் ஏற்றிடுங்கள் என்று கேட்கிறாய்? தினபதி தினந்தோறும் திரித்துக் கூறித்திரியட்டும்—வாரந்தோறும் சிந்தாமணி வம்பளந்து தமிழை அழிக்கட்டும் என்று சிங்களப்பத்திரிகை நிறுவனம் தமிழ்ப் பேசும் மக்களைப் பல பிரிவுகளுக்குள்ளாக்கி, 'பல்லுக்கு பதம் பார்க்க' நினைப்பதை யாம் அறிவோம்,

**'துரை'—கண்டி**

'சிங்களத் தமிழ், என்றால் சீற்றமேனோ? கல்கி 'சிங்களத்தீவின் தமிழ்' என்று பொருள் படக் கூறியிருக்கலாம். இல்லை, சிந்தாமணி கூறுவது போல சிலேடையாகவே கூறியிருந்தாலும் கூடப் பாதகமில்லை, என்று எனக்குப்படுகிறது. காரணம், தமிழ் நாட்டில் நடைபெற்ற சைவப் பேரவையில் தமிழுக்குக் குறைந்தநேரமும் ஆங்கிலத்திற்குக் கூடிய நேரமும் கொடுத்திருந்தால் தாய், சேய்க்குக் குத்தலாகக் கூறிக் கண்டித்த தாகுமேயன்றி உதைத்ததாகாதே! குற்றத்தைச் சுட்டிக் காட்டத் தமிழ்ப் புலவர்கள் எழுத்தாளர்கள் ஒரு போதும் தயங்கவில்லை ஏனெனில் நாம் நக்கீரர் வழி வந்தோரன்றோ!

இலங்கைக்கு தமிழ் நாட்டு ஏடுகள் கூடாது, ஆகாது, பணவிரயம், பண்பாட்டு அழிவு என்றெல்லாம் கூறித் தமிழ்ச் சஞ்சிகைகளைத் தடுத்துத் தாய்க்கும் சேய்க்கும் பிரிவினையை ஏற்படுத்தி, ஈற்றில் சேயை அழிக்கச் சதி செய்தார்கள் தமிழ் வளர்க்கும் தரமிலிகள். கொடுமையது! என்று குரல் கொடுத்தோம். 'கோட்டா' வைக் கொண்டு வந்து குறைத்தார்கள், தமிழ் நாட்டு ஏடுகளை. இங்கே தரமுள்ள தமிழேடுகளுக்குத் தட்டுப்பாடு இன்று. அதுவும் காணுவோ!

தமிழ் நாட்டு ஏடுகளுக்கெதிராகத் துவேஷத்தை வளர்த்து விட்டால் தடுத்திடலாம் தமிழக ஏடுகளை முற்றாக, என்று சிந்தித்துக் கருமமாற்ற முனைகின்றனவா சிங்களத் தமிழ் ஏடுகள்'?

ஆசை வார்த்தை காட்டி எம்மைஏமாற்றியகாலம்மலையேறிவிட்டது. தமிழர்கள் விழித்துக் கொண்டார்கள். கல்கிகூறியதற்குக்கண்டனம் தெரிவிக்கும் நேரத்தில் ஆனந்த விகடனை வீணாக இழுத்தது தான் ஏனோ? இதிலிருந்துதெரிகிறதல்லவா சூழ்ச்சி! கல்கியும் ஆனந்த விகடனும் ஈழத்தமிழர்களை தம்பால் ஈர்த்துக் கொண்டுள்ளன. எனவே இரண்டிற்கும் எதிராக ஈனச் செயல் புரிவோமே என்று நினைக்கிறது சிங்களத் தமிழ் ஏடு—சிந்தாமணி.

இப்படிப்பட்ட மகுடியூதும் மாற்றாந்தாய்களை நம்பி மோசம் போகமாட்டார்கள், மறத்தமிழர்கள். இன அழிவுப்பாதைக்கு வழிவகுக்கும் சிங்களத்தலைவர்கள் கொண்ட கட்சிகளையும் மாற்றார் அரவணைப்பில் வெளிவரும் ஏடுகளையும் தமிழ் மக்கள் ஆதரிக்கவே கூடாது. எங்களுடைய பணத்தைக் கொடுத்து எங்களையே அழிக்கும் நச்சுப் பூண்டுகளை வளரவிடாது தடுக்கும் ஒரே வழி, அவ்வேடுகளை வாங்காது விடுவதே.

பேரறிஞர் அண்ணா சொன்ன புத்திமதியைப்பின் பற்றி நடந்தால் ஒருபோதும் நம்மையாரும் ஏமாற்ற முடியாது. 'யார் எதைச் சொன்னாலும், யார் சொல்லுகிறார் எதற்காகச் சொல்லுகிறார் என்று ஆழ்ந்து சிந்தித்த பின்பே அதை ஏற்றுக் கொள்' என்கிறார் எமது மூத்தவர். அண்ணன் அறிவுரை அகத்திருப்பின் அழிந்தொழியாள் தமிழன்னை ஈழத்திலும்!

# விடுதலை வெறியூட்டும் 'சிவந்த மண்' திரைப்படத்துக்கு எதிராகதினபதியார் நஞ்சு கக்குவதேன்?

''சிவந்த மண்'' படத்தை வீழ்த்த தினபதியார் தனது குல்மால் வேலைகளை ஆரம்பித்து விட்டார். தனது சாக்கடை எண்ணங்களை நிறைவேற்ற எம். ஜி. ஆர். ரசிகர்களைக் கருவியாகப் பயன்படுத்தலாம் என்று நப்பாசை வைத்து எதை எதையோ எழுதி வருகிறார்— எம். ஜி. ஆர். ரசிகர்களுக்கு இது சோதனை நிறைந்த வேளை— தினபதியாரின் சூழ்ச்சியில் சிக்காமல், அவரது உள் நோக்கத்தை இனங் கண்டு கொண்டு, செயலாற்ற வேண்டிய வேலை இது.

டைரக்டர் ஸ்ரீதர் ''அன்று சிந்திய இரத்தம்', என்ற பெயரில் எம். ஜி. ஆரை நாயகனாக வைத்து படம் எடுக்க இருந்தாராம்— பின்னர் எம். ஜி. ஆருக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டு, அதே கதையின் பெயரை ''சிவந்த மண்'' என்று மாற்றி சிவாஜியைப் போட்டு எடுத்தாராம்—இதனால் எம். ஜி. ஆர். ரசிகர்கள் எல்லோரும் இப்படத்தை பகிஷ்கரித்து ''சிவந்த மண்'' படத்தை வீழ்த்த வேண்டுமாம்—

எப்படி இருக்கிறது தினபதியாரின் கதை? சதக் காசுக்கு உடலை விற்கும் பரத்தை, சாவித்திரி சந்திரமதி கதை சொன்னதைப் போல் இருக்கிறது. — இலங்கையின் முதலாம் ''நம்பர்'' நம்பிக்கைத் துரோகி ஸ்ரீதரின் நம்பிக்கைத் துரோகத்தைச் சொல்லி முட்டி முட்டியாக முதலைக் கண்ணீர் வடிப்பதன் உள் நோக்கம் என்ன? எம். ஜி. ஆர். ரசிகர்கள் வடிகட்டிய முட்டாள்கள் என்று நினைத்தாரா குல்மால் நாயகம்?

''சிவந்த மண்'' ணின் கதை என்ன? தனது சொந்த நாட்டையே அந்நியனுக்கு அடிமைச் சீட்டு எழுதித்தர முன்வருகிறான் ஒரு கொடிய ஜவான். அடிமைத் தளையில் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு சுதந்திர வெறியேற்றி, வீர உணர்வேற்றி, பற்பல வீர சாகஸங்களைச் செய்கிறான் விடுதலை வீரன் ஒருவன்—இதை இலங்கையின் கதையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்—

தமது சொந்த இனத்தை சிங்களவனுக்கு அடிமைச் சீட்டு எழுதித்தர முன்வருகிறார்கள் துரோகிகள்— குமாரசூரியர், அருளம்பலம் தியாகராசா, ஆனந்தசங்கரி வ. பொன்னம்பலம், எம்.சி. சுப்பிரமணியம், ராஜன் செல்வநாயகம், அல்பிரட் துரையப்பா. நவீன சோசலிச மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் மக்களுக்கு சுதந்திர வெறி ஏறி வருகிறது; வீர உணர்வு ஏறிவருகிறது; விடுதலைக் கனல் மூளத் தொடங்கி விட்டது. தமிழரசுக்கட்சியின் போராட்டம் தினத்தன்று— சிங்களவனின் சித்தம் கலங்க, துரோகிகளின் திட்டங்கள் தவிடு பொடியாக குமுறிக் கொண்டிருக்கும் தமிழனின் சுதந்திர உணர்வு எரிமலையென வெடிக்கப் போகிறது—

''சிவந்த மண்'' ணின் கதைக்கும் இலங்கைத் தமிழனின் கதைக்கும் எவ்வளவு ஒற்றுமை? தமிழன் விடுதலைப் போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் —சரியான நேரத்தில் ''சிவந்த மண்'' வந்திருக்கிறது—எத்தனையோ தமிழருக்கு இன்று தமிழுணர்ச்சியை மறுபடியும் தந்து கொண்டிருக்கிறது,

இதனால் தான் தமிழ்த் துரோகி தினபதியார் இப்படத்தை வீழ்த்த இன்று தனது பத்திரிகையில் ஒரு பயங்கர இயக்கத்தையே தொடங்கியுள்ளார்— தினந்தோறும் அவரது பத்திரிகை ''சிவந்த மண்'' ணுக்கெதிராக விஷம் கக்கி வருகிறது. தனது சூழ்ச்சியில் எம். ஜி. ஆர். ரசிகர்களைக் கருவியாகப் பயன்படுத்துவதே அவரது திட்டம் — எம். ஜி. ஆர் ரசிகர்களே உஷார் விழித்தெழுங்கள் !!

தமிழ் நாட்டில் தமிழ் மொழியின், தமிழனின் காவற்படையினர் தி. மு. கவினர் இப்படையின் தளபதி எம். ஜி. ஆர். இலங்கைத் தமிழனுக்கு மொழிப்புணர்வை, விடுதலை வேட்கையை ஊட்டும் எந்தப் படத்தையும் பகிஷ்கரிப்பது எம். ஜி. ஆரின் இலட்சியத்துக்குச் செய்ததுரோகமாக முடியும்.


**எம்.ஜி.ஆர். தாசன்**

விடுதலை வேட்கையை யார் ஊட்டினுலென்ன? அது எம். ஜி. ஆர். ஆயிருந்தாலென்ன, சிவாஜியாயிருந் தாலென்ன? தனது பெயரைச் சொல்லி தனது ரசிகர்கள் விடுதலை வீரனின் வரலாற்றை சித்தரிக்கும் படத்தை, வீர உணர்வை ஏற்படுத்தும் படத்தை பகிஷ்கரித்தார்கள் என்றால் எம். ஜி. ஆரின் மனதில் உதிரம் கொட்டாதா? வீர உணர்வு, விடுதலை வேட்கை, தமிழுணர்ச்சி கொண்டவர்களல்லவா எம். ஜி. ஆரும் [illegible] வழி வந்தோரும்?

குறுகிய காரணத்துக்காக உயர்ந்த இலட்சியம் கொண்ட படத்தை பகிஷ்கரித்தால், அது எம். ஜி. ஆரும் அவரது ரசிகர்களும் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் என்று சொல்லாமல் சொல்வது ஆகாதா? கலைஞர் கருணாநிதிக்கும் எம். ஜி. ஆருக்கும்சண்டு முடிந்துவிட முயன்று தோற்ற தினபதியாரின் தமிழ்த் துரோகச் சதிக்கு ஆதரவு தரும் ஐந்தாம் படையினரா எம். ஜி. ஆர். ரசிகர்கள்?

எனவே எம். ஜி. ஆர். ரசிகர்கள் விழித்தெழ வேண்டும். தினபதியாரின் சதியை உடைத்தெறிய முன்வர வேண்டும். தினபதியை அகப்பட்ட இடமெல்லாம் தீ வைத்துக் கொளுத்த வேண்டும் — எம். ஜி. ஆரின் அரசியல் கொள்கையை, விடுதலை வேட்கையை உண்மையாகஉணர்ந்து, இதனைச் சித்தரிக்கும் படங்களை—அதில் யார் நடித்தாலென்ன—பெருமளவில் ஆதரிக்க வேண்டும். சிவந்த மண்ணை இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு எம். ஜி. ஆர். ரசிகனும், ஒவ்வொரு தமிழ் மகனும் தனது தோள்களில் தினவெடுக்கும் வரை, நரம்புகளில் முறுக்கேறும் வரை விடுதலை உணர்ச்சி இரத்தத்தில் ஊறும் வரை மீண்டும் மீண்டும் பார்க்கவேண்டும். இலங்கையில் தமிழ் விடுதலைப் போர் மூளவேண்டும்.

## கடமையே கண்ணான அதிபர்



'செய்வன திருந்தச் செய்' என்னும் ஔவைப் பிராட்டியின் தெய்வவாக்கை செவ்வையாகக்கைக்கொண்டு கருமமாற்றுபவர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள்.

1945-ம் ஆண்டில் அவர் அதிபராகக் கடமையேற்ற போது மெய்கண்டான் பாடசாலையாய் 8 ஆசிரியர்களுடன் இருந்து ஆண்டுதோறும் உயர்ந்து 1951-ம் ஆண்டிலே உயர்தர பாடசாலையாய் 15 ஆசிரியர்களுக்கு இடமாகி வெள்ளிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பின்னும் வளர்ந்து அரசாங்கம் பொறுப்பேற்ற போது 23 ஆசிரியர்கள் கடமையாற்றும் மகாவித்தியாலயமானது. புதிய புதிய மண்டபங்கள், வீட்டுப்பணி நெசவு சாலைகள் அவருடைய அயரா முயற்சியால் உருவாயின.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், வடவிலங்கையாசிரியர் சங்கம், வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்கங்களிலே தலைவராய்ச்செயலாளராய்ப்பல்லாண்டு பணி புரிந்து வந்துள்ளார். அதிபர் அவர்கள் தாம் பிறந்தகிராமமாகிய பண்ணாகத்தில் பல சங்கங்களை உருவாக்கித்திறம்பட நடத்தியவர். பண்ணாகம் தெற்கு வாலிபர் சங்கம், பண்ணாகம் விசுவத்தனை

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை முருகன் ஆலய திருவிழாச் சிறப்பிதழ்

# பேராதனையில் முருகன் திருவிழா!

சரவணப் பொய்கையில் உதித்த சண்முகன், சூரனை அழித்து உலகை உய்ய வைப்பதற்கு என வந்தவன். நான்முகனும் அறியாத பிரணவத்தின் பொருளைத் தந்தைக்கு உபதேசித்த சிவகுருநாதன் அவன். குன்று தோறும் குடிகொண்ட குமரன். அழகன் முருகனின் பெருமையைப் பாடாத நூல் இல்லை; பேசாத நாவில்லை. எண்ணாத நெஞ்சமில்லை. அவன் நினைவுகள் என்றுமே இனியவை. இயற்கையின் எழிலை ஒருங்கே தன்கைக்குள் அடக்கிய அழகன் அந்தக் குறிஞ்சிக் குமரன். அடியார்கட்கு எளிதில் இரங்கி அருள் பாலிக்க என்றுமே தயங்குவதில்லை.



இவ்வாறு பலராலும் போற்றப்படுகின்ற குன்றுதோறாடிவரும் குமரவடிவேலன் எழில் மிகு ஈழத்தின் குறிஞ்சி மலை நாட்டில் உயர் கல்விப் பீடமாக அமைந்துள்ள பேராதனை நகரில் குன்று மீது ஒன்றில் குடிகொண்டான். அவனை அங்கு அழைத்து வந்து இருத்தினர் பல்கலை பயில வந்த மாணவர் கூட்டத்தினர். அழைத்து இருத்தியதுடன் மாத்திரம் நின்று விடாது ஆண்டுதோறும் அந்த சண்முகநாதனுக்கு விழா எடுத்தும் வருகின்றனர். இன்று அந்த வடிவேலனின் அலங்கார உற்சவ தின விழா ஆரம்பம். தொடர்ந்து பத்து தினங்களில் இவ்விழா கொண்டாடப்பட்டு தைப்பூசத்துடன் பூர்த்தியாகும்.

பண்டு தொட்டு பெருந்தமிழ் மக்கள் வழிபட்டு வந்த சங்கரன் மைந்தனிற்கு திருமால் மருகனிற்கு வியத்தகு வகையில் விழா எடுக்கும் பல்கலைக் கழகம் பூராவுமே விழாக் கோலம் பூண்டுள்ளது. எங்கு பார்த்தாலும் ஒரே பக்தி மயம். பயில வந்த பாவையர் நோன்புடன் விழாவை அனுஷ்டிக்க காளையர் கூட்டம் தீவிர திருப்பணியில் ஈடுபட்டு விழாவைச் சிறப்பிக்கின்றமை என்றுமே நெஞ்சை விட்டகலாத — காணுதற்கரிய காட்சியாக நிலைத்து விடுகின்றது. சுருங்கக்கூறின் இத்தினங்களில் மாணவர் மத்தியில் பாட நூல்கள் கொண்ட இடத்தை குமரன் விழா பெற்று விடுகின்றது. அவன் அருளைப் பெற்றால் தானே கல்வியை வெற்றிகரமாக அணுகமுடிகின்றது என்ற பேருண்மையை அறிந்தவர்கள் போலும் இவர்கள்.

## 'வள்ளி'

பல கலைகளையும் பயில வந்த மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்று மீண்டும் தாங்கள் கோயில் எடுத்த குமரனை ஒன்று கூடி வழிபடும் நோக்கில் 7ம் நாள் திருவிழாவைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் முன்னிலையில் படிப்படியாக உருவானதென்றே இக்குறிஞ்சிக் குமரன் ஆலயம் குமரன் கோயிலுடன் ஒன்றி விட்டவர்கள் அவர்கள். அதனால் தானன்றோ பட்டம் பெற்று மீண்ட போதிலும் எண்ணற்ற அல்லை தொல்லைகட்கு நடுவிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடமையாற்றிக் கொண்டு இருந்த இடத்திலும் மெய்வருத்தம் நோக்காது இங்கு வந்து உற்சவத்தில் பங்கு கொள்ளுகின்றனர் போலும். பட்டம் பெற்று இன்று நாட்டின் பல்வேறு திசைகளிலும் தொழில் ஆற்றும் முன்னை நாள் இந்து மாணவர்கள் குமரனின் அலங்கார உற்சவ திருவிழாவில் பங்கு கொண்டு வருவதற்கு உறுதுணையாக இருப்பது இந்து மன்றத்தின் பெருந் தலைவர் திரு. கனகசபாபதி அவர்களது விருந்தோம்பல் பண்பாகும். எந்நேரமும் இன்முகம் கொண்டு எவரையும் வரவேற்கும் கனகசபாபதி தம்பதிகள் இருக்கும் வரை குமரன் ஆலயத்தினைத் தரிசிக்க வருவோருக்கு எதுவித யோசனையும் தேவையில்லை.

திருவிழா தினங்களில் ஆலய மடத்திலேயே மூன்று வேளைகட்கும் உணவு தயாரிக்கப்பட்டு அங்கு எழுந்தருளியுள்ள பக்தர் கூட்டத்திற்கு அளிக்கப் படுகின்றது. இதற்கான சகல வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டு இருப்பதே பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம். இங்கு வருகின்ற அடியார் கூட்டம் பாத யாத்திரையை மேற்கொண்டு இத்தலத்தைத் தரிசிப்பதில் இருந்து பக்தர்களின் மெய்யன்பு வெளிப்படுகின்றது என்பதை யாவரும் மறுக்கமாட்டார்கள். இன்று ஈழத்திலுள்ள பிரபல்யமான முருகன் ஆலயங்களுள் மிக அண்மையில் எழுந்த பேராதனை குறிஞ்சிக் குமரன் கோயிலும் முக்கிய இடத்தைப் பெற்று இருப்பது அந்த முருகன் அருளே.

# குறுமுறுவல்

பேராதனை யில்வந் தமர்ந்தருளாய்
　பெருவிருப் போடு முருகா நீ
சீரார் மாவிட்ட புரத்தினின்று
　புறப்பட்டாயே, அன்று நான்
ஆரா அன்பை அகம்நிறைய
　அள்ளிக் கொண்டு அங்குவந்து
வீரா உனது கழல்பணிந்தேன்
　விழிகள் பெற்ற பயன்பெற்றேன்.

மெல்ல நிமிர்ந்து முருகா உன்
　முகமலர் நோக்கி அகங்குழைந்தேன்,
சொல்ல முடியா அழகுமுகம்
　சோதி வீசும் அருட்கண்கள்
கல்லுங் கனியுங் குறுமுறுவல்,
　கவிக்கு மெட்டா அருள்முறுவல்,
கொல்ல எண்ணிச் சிரித்தாயோ?—எனைக்
　கொள்ள எண்ணிச் சிரித்தாயோ.

யாழும் மனமோ அன்றுமுதற்
　பற்றிக் கொண்ட துன்னடியை
நாளும் பேரா தனைமலைக்கு
　நானே தேடி ஓடிவந்தேன்
காலும் உடலும் சோர்ந்ததில்லை
　கண்ணும் கருத்தும் நிறைந்ததில்லை
நாளும் கண்டேன் அம்முறுவல்
　நானோ அறியே னதன்பொருளை.

காலம் சென்றது. படுபாவிக்
　கழகக் கல்வி முடிந்துவிட
வேலா உன்னைப் பிரிந்தேன் நான்
　விதியோ சதியோ நானறியேன்
வாளாய் உனது மென்முறுவல்
　வதைத்து உயிரை அறுக்கிறதே,
வேலா வாராய் இக்கணமே,
　விரைந்து என்னைக் காராயோ?

—ஈஸ்வரி,

# குமரன் கோவில்

குன்றின் மேலேறிச் செல்வோமென்று
　கூப்பிட்டாளென் தோழி குன்றின் மீது
சென்றேறி நின்றேனொரு குன்றின் மீது
　செ[illegible] விழந்து நினைவழிந்தேன், ஆகா அது
குன்று! அழகைக் கொணர்ந்து அங்கே
　கொட்டியுள்ளான் இயற்கைக் குமரி, அதில்
குன்றாத பக்தி கொண்டோர் தபமைக்கண்டு
　குமரனொரு கோவிலமைத் துள்ளானம்மா:

—குகப்பிரியா,

# திருக்கார்த்திகையில் எழுந்தருளிய கார்த்திகேயன்

எம் பேராதனை முருகன் இருக்கின்றானே அவன் கார்த்திகேயன், 'இதிலென்ன இருக்கிறது. முருகனுக்குக் கார்த்திகேயன் என்பதும் ஒரு பெயர்தானே' எனச் சிந்திக்கிறீர்களா? அதிலொரு விசேஷம் இருக்கிறதுதான். பேராதனையிலே குடிபுகுவதற்கு 1966ம் வருடத் திருக்கார்த்திகையன்றுதான் அத்திவாரமிட்டான் அந்தக் கார்த்திகேயன். அந்தத் திருக்கார்த்திகைப் பெருநாள் எம்மால் மறக்கமுடியாத திருநாள்.

அந்த நினைவாக ஒவ்வொரு திருக்கார்த்திகைத் தினத்திலும் நாம் கொண்டாடத் தவறுவதில்லை. முருகன் அங்கே அருட்சோதி வீசத் தொடங்கிய ஒளித்திருநாள் அல்லவா? கோவிலையே ஒளி மயமாக்கிமகிழ்வதிலே எமக்கோர் உற்சாகம்.

அந்த நினைவுநாளைச் சரியான முறையிலே கொண்டாட வேண்டுமென்பதில் எமக்கு மட்டுமல்ல முருகனுக்கும் ஓர் ஆசை. எப்படியோ ஒரு முறையாவது மழை பொழிய வைத்துவிடுவான்.

கொட்டிய மழைநீர் தேங்கி நிற்கக் கட்டியாக உறைந்திருக்கும் எண்ணெயுடனிருக்கும் அகல் விளக்குகளைக் கோவிலைச் சுற்றிவர ஏற்றி வைப்போம். எப்படியோ கஷ்டப்பட்டு நாம் ஏற்றும் விளக்குகள் முருகனருளால் பிரகாசித்து எரிவதைக் காணும்போது என் நினைவிலே இதுதான் தோன்றும்.

''திருவிழா பொருத்தமான நினைவு விழாவாகத் தான் அமைந்திருக்கிறது. [illegible] மாகவா கட்டிமுடித்தார்கள்? கோவில் கட்டத் தொடங்கியபோது எத்தனை எதிர்ப்புகள். எவ்வளவு கேலியும் கிண்டலும்.

''கோயிலே கட்டப்போறான்கள், காசை வாங்கிக் கொண்டு போய்க் குடிச்சு

## 'சம்யுக்தா'

வெறிப்பான்கள்'' என்பது போன்ற பல கடுஞ்சொற்கள்.

அதன் நடுவே முருகனருளால் எமக்குப் பேராதரவு நல்கிய ஒவ்வொரு உள்ளங்களும் எம் கோவிலின் கோபுரத்தைப்போல் உயர்ந்தது என்றுதான் நாம் நன்றியுடன் நினைக்கிறோம்.

ஆனால் அந்த எதிர்ப்புகள், அதுதான் அன்று பொழியும் மழையோ? அதன் நடுவே நாம் தீபம் ஏற்றப்படும் கஷ்டம், எம் கோவில் எழக்காரணமான இந்து மாணவர் சங்கத்தின் அன்றைய தலைவர் திரு. அப்புலிங்கம் போன்றோர் பட்ட கஷ்டத்தை நினைவூட்டும் சாயலோ? அதன் பயனாக ஒளிவீசும் தீபங்கள் அருளொளி நல்கும் முருகனாலயமோ? ஆம் அவன் கஷ்டத்தின் நடுவே முந்த கார்த்திகேயன், ஆலயத்தின் நடுவே பெற்ற அமிர்தம்.

# தமிழரசுக்காரர் காங்கேசன்துறை ப. ச. தலைவரானார்!

காங்கேசன் துறைத் தமிழரசுக்கட்சி கிளைத்தலைவரும் பட்டின சபையின் மூன்றாம் வட்டார உறுப்பினருமான திரு. இ. குருசாமி அவர்கள் பட்டினசபையின் தலைவராக கடந்த 24-1-71 அன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தந்தை செல்வாவின் இல்லத்தில் அவர் முன்னிலையில் மூன்று தமிழரசு உறுப்பினர்களும் முதலாம் வட்டார உறுப்பினரான திரு. க. ஜெயபாலசிங்கமும் செய்து கொண்ட எழுதப்படாத உடன்படிக்கைக்கமைய முதல் வருடம் தலைவராக விருந்த திரு. க. ஜெயபாலசிங்கம் தமது பதவி நீங்கற் கடிதத்தைச் சமர்பித்ததைத் தொடர்ந்தே 24. 1. 71 தேர்தல் நடைபெற்றது.

''பட்டின சபையின் கடந்த கால வரலாற்றில் தலைவர் தேர்வின் போது பல உடன்படிக்கைகள் செய்யப்பட்டு அவையாவும் நிறைவேறாது போனமை மக்கள் அறிந்ததே. ஆயின் ஆன்மீக உறுதி மிக்க ஒரு தலைவனின் முன்னிலையில் செய்யப்பட்ட உடன்படிக்கை என்ற காரணத்தாலேதான் இவ் உடன்படிக்கை நிறைவேற முடிந்தது என்று கருதுகிறேன். தந்தை செல்வாவுக்கும், வாய்மைகாத்த பட்டின சபையின் 3 உறுப்பினர்களுக்கும் சிறப்பாக திரு. க. ஜெயபாலசிங்கத்துக்கும் என் நன்றி உரித்தாகுக'' என, தேர்தல் முடிந்த பின் மக்கள் மத்தியில் உரையாற்றிய திரு. இ. குருசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி கி. ச. தமிழரசார் வசமானது!

கரைச்சி கிராசசபை இலங்கை தமிழரசுக் கட்சி வசமானது. இதன் தலைவராக கா. செல்லையா அவர்களும் உப தலைவராக பா. பி. சேவியர் அவர்களும் தெரிவு செய்யப் பட்டார்கள். தலைவர்தெரிவு நடை பெற்றதும் காங்கிரஸ் ஆதரவாளர்கள் 8 பேரும் வெளி நடப்பு செய்தனர்.

காங்கிரஸ் கட்சிசார்ப்பில் கிளிநொச்சி பா. உ. ஆனந்த சங்கரி நிறுத்திய வேட்பாளர் செல்லத்துரைக்கு ஆதரவு தேடும் முகமாக நடத்திய கிராமசபை உறுப்பினர் ஆள்பிடிப்பு முயற்சியின் போது ஆனையிறவு உப தபால் அதிபர் வேலை சமாதான நீதிபதி பதவி, 2 வருட சேர்மன் வேலை, தங்கச்சிக்கு உத்தியோகம், இவைகள் தரலாமென காட்டிய ஆசைகள் புஸ்வாணமாகி விட்டது.

ஆலாலசுந்தரம், கிளிநொச்சி பட்டின் சபை தலைவர், உப தலைவர் உட்பட 13 உறுப்பினர்களும் உழவு யந்திரம், கார்கள் சகிதம் ஊர்வலமாக கிளிநொச்சிபட்டின பிரதான வீதி வழியாக அழைத்து செல்லப்பட்டனர்.

இதன் பின்னர் தமிழரசு கிளிநொச்சி மாவட்ட கிளை மத்திய அலுவலகத்தில் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்களால் தேநீர் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது. கரைச்சி கிராமசபை தெரிவின்போது மாஜி தமிழரசு கிளிநொச்சி பா. உ. திரு அ. சிவசுந்தரம் அவர்கள்முன் னின்று உழைத்தமை குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவரைப் பாராட்டி. பா. பி. சேவியர் சு. பேராயிரசிங்கம், மு. ஆலாலசுந்தரம், முருகேசு (கி. ப. சபைதலைவர்) ஆகியோர் பேசினர்.

கிளிநொச்சி பட்டினசபையும், கரைச்சிகிராமசபையும் இப்போது தமிழரசு வசம் உளது.

---

## கடமையே...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

முருகமூர்த்தி கோவிற் பரிபாலனசபை என்பனவற்றின் ஸ்தாபகருள் ஒருவராய்த் தலைமை வகித்து அவைசெம்மையாக இயங்கச் சேவை புரிந்தவர். பண்ணாகம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராய் இருந்து நேர்மையாகவும் அதனை நடத்தி வருகின்ருர்.

அன்னார் 31-12-70 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அதிபர் அவர்கள் சுகமும் நிறைவும் எய்திப் பல்லாண்டு வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்ரேம்.

—பண்டிதர் அ. ஆறுமுகம்.

---

4ம் பக்கபடவிளக்கம்

## வேறுபாடு இதுதான்!

பௌத்த பிக்குவுக்கு முன் மாதேசாதிபதி மண்டியிட்டு மரியாதை செய்கிருர். ஆனல் மாதேசாதிபதிக்குமுன் இந்து மதக் குருவோ பணிந்து ஆசீர்வாதம் செய்கிருர். மாதேசாதிபதி நிமிர்ந்து நிற்கிருர். ஏன் இந்த வேறுபாடு? இந்துமதத் தலைவர்கள் சிந்திக்கவேண்டும்.

## ஆட்சியாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பு உணர்ச்சி காணப் பட்டது தெரிந்ததே.

அண்மையில் வடபகுதிக்கு சென்றிருந்த நிதியமைச்சருக்கு வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் கடும் எதிர்ப்பு காத்திருந்தது. 'சிக்கனம் பேசும் என். எம்.மே, உமக்கு சிங்கார வரவேற்பு ஏன்'?— என். எம். உனது மொழிக் கொள்கை என்னச்சு? இனம் இனத்தோடு சேர்ந்தாச்சு— என். எம். பெரேராவே திரும்பிப் போ—உங்கள் சம அந்தஸ்து கொள்கை எங்கே— இதுவா சோசலிசம்— தரப்படுத்தலா இனப்படுத்தலா?— என்பன போன்ற எதிர்ப்புக் கோஷங்கள் ஆங்காங்கே எழுதப்பட்டிருந்தன.

வல்வெட்டித்துறையில் கூட்டணிக் கட்சிகளின் கிளையொன்று திறக்க சென்றிருந்த நிதியமைச்சருக்கு மக்கள் வீதியெங்கும் குப்பை கூளங்களையும் மலத்தையும் கொட்டி வரவேற்பளித்தனர். நிதியமைச்சர் இதனுல் கீழே இறங்கமுடியாது காரிலிருந்தபடியே மாலையை வாங்கிக்கொண்டு போய் விட்டாராம்.

இந்த அனுபவங்களின் பின் நிதியமைச்சர் கொழும்பு திரும்பிய பின்னரே அடக்கு முறையை பிரயோகித்து மக்களின் எதிர்ப்புணர்வை நசுக்குவதென்று முடிவெடுக்கப்பட்டதென்று தெரிகிறது.

தமிழ்ப்பகுதியில்அரசாங்க எதிர்ப்பியக்கத்தில் ஈடுபடும் இளைஞர்கள், மாணவர்மீது வேட்டை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து சி. ஐ. டி. அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாம்.

---

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக யாரோ தேசியக் கொடியைபறக்கவிட்டிருந்தனர். பொலீசார் தலையிட்டும் நகரசபைக்கு சொந்தமான இக்கட்டிடங்களிலிருந்து தேசிய கொடி இறக்கப்படாததால், நகரசபைக் கட்டடத்தில் கறுப்புக்கொடியேற்றிவைக்கப்பட்டது. திருமலை பா. உ. திரு. பா. நேமிநாதன் வீட்டிலும் கறுப்புக்கொடி பறந்தது.

ஆனல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த யாழ் மேயர் துரைராசாவும், மற்றும் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்களான நகர பிதாக்களும் 'காவடி' தியாகராசாவும் கலந்துகொண்டு தமிழர் மானத்தை காற்றில் பறக்கவிட்டனர்.

எனினும், இலுப்பையடிச் சந்தி, சட்டநாதர் கோவிலடி, வண்ணுர் பண்ணை ஆகிய இடங்களில் கறுப்புக்கொடிகள் பறந்தன. தமிழரக்கட்சி பா. உ.க்கள் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை பூரணமாக பகிஷ்கரித்தனர்.

---

## சுதந்திரன்...

(1ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாருக அமைச்சரால் ஆசிரியருக்கு கூறிய செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட மக்கள் சோஷலிசமாம் சோஷலிசம் என்று ஏளனமாகக் கூறித் திரிகிருர்கள்.

மேலும் அக்குறிப்பிட்ட ஆசிரியர் பல்கலைக்கழகப் பிரவேசத்தில் தரப்படுத்தல் பற்றிக் கேட்டபோது அவன் செய்தது பிழைதான் என்று கூறினுராம். 'அவர் [illegible] யாரைக்குறிப்பிட்டார்' என்பதை மக்கள் இலகுவாக அறிந்துகொள்வர்.

# தி. மு. க. தேர்தல் அறிக்கை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் வார்ப்படம் அல்ல; அவையவை இடர்பாடுகளின்றி ஆங்காங்கே ஆரோக்கியமான சூழ்நிலையில் வளர இடமளித்தால்தான் இந்திய ஒருமைப்பாடு மேலும் வலுப் பெறும் என்று நம்புகிரேம். 'யூனியன்' என்கிற ஒற்றுமைதான் வலுவான இந்தியாவை உருவாக்குமேயல்லாது, வெவ்வேறு மொழி—கலை—கலாச்சாரங்களை அடையாளம் தெரியாமல் மாற்றி உருவாக்கப்படும் ''ஒன்றிப்போன தன்மை'' என்பது, வலுவான இந்தியாவிற்கு ஆக்கமளிக்காது என்பதையும் கோடிட்டுக்காட்ட விரும்புகிரேம்.

### மொழிக் கொள்கை

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தமிழும் ஆங்கிலமும் இணைந்து பயன்தரும் வகையில் கழகத்தின் கொள்கையாக இருக்கும்.

அதற்கேற்றவாறே -சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் அரசினர் கல்விக் கூடங்களில் இந்தியை அகற்றி தமிழ்—ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கை அமுலாக்கப்பட்டிருக்கிறது.

எத்தகைய எதிர்ப்புகள் எதிர்ப்படினும், இந்த இரு மொழிக் கொள்கையில் எந்த வித மாற்றமும் இருக்காது; இந்திக்கு இடமும் இருக்காது.

இந்தி ஆதிக்கத்தைப் பரப்பி உருவாக்க நினைப்பது வலுவான 'ஹிந்தியா' ஆகுமே தவிர இந்தியா ஆகாது என்பதைக் கருத்தில்கொண்டு; ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கத் தக்க விதத்தில்; அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யவேண்டும் என்றும்; அதுவே வலுவான இந்தியாவிற்கு இந்தத் தலைமுறையினர் எழுப்பும் அடிப்படையாக இருக்கும் என்றும் கருதுகிரேம்.

### கூட்டாட்சி

இந்திய அரசியல் முறை, 'கூட்டாட்சி முறை' என்று வர்ணிக்கப்பட்டாலும், அந்தத் தராசு மத்திய அரசு பக்கம் அதிக பட்சம் சாய்ந்திருப்பதால்; அதிகாரத் துறையிலும் நிதித் துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல்தடைகள் இருப்பதால்; அதே நேரம் இந்தியா வலுப்பெற்றதாக இருக்கவேண்டுமென்கிற இலட்சியத்திற்கும் ஊறு தேடாமல்; எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்படவேண்டுமோ அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்துவிட்டு; இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி; மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கருதுகிரேம்.

இந்த நோக்கத்தோடு நமது அரசு அமைத்த வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு; அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்.

### அதிக அதிகாரம்

அரசியல்துறை அதிகாரங்களும், நிதித்துறை அதிகாரங்களும், மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது; மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்கிற ஆசையால் அரசுகள் மக்களு[illegible] இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும்— என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிரேம் என்பதையும் தெளிவாகக விரும்புகிரேம்.

### சமுதாய சீர்திருத்தம்

விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமதர்மச் சமுதாயம் அமைப்பதே நமது இலட்சியம்என்று கூறுகிற நேரத்தில்; இந்த நோக்கத்தில் நமது பொருளாதாரக் கொள்கையும்; சமுதாயக் கொள்கையும் இணைந்திருப்பதை எடுத்துக் காட்ட விரும்புகிரேம்.

சாதி—பேதம் நிறைந்த நிலப்பிரபுத்துவ சமுதாயம் நமது வளர்ச்சிக்குப்போடப் படும் விலங்காகும்.

ஆசியாவின் மிகப் பெரிய சமுதாய சீர்திருத்த இயக்கமான நமது இயக்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இத்துறைகளில் செய்திருக்கும் சாதனைகள் சாதாரணமானதல்ல.

—ஆகவே சமுதாய சீர்திருத்தத் துறையில் நமது பணி தொடர்ந்து நடைபெறும். அதுவே விஞ்ஞான யுகத்திற்கேற்ற சமுதாயம் உருவாகும் வழி என்று கருதுகிரேம்.

### இந்நாட்டு மன்னர்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற நினைவோடு பணியாற்றுகின்ற எந்தக் கட்சியுடனும் கழகத்திற்கு நட்புறவு உண்டு. அது தேர்தல் உறவாக இல்லாமல் கூட இருக்கலாம். ஆனல் கொள்கை உறவாக நிச்சயம் இருக்கும். எல்லாரும் மன்னரல்ல; இருநூறு பேரே மன்னரெனக் கூறி சந்தர்ப்பவாதக் கூட்டுக்களின் மூலம், பதவி பிடிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கொள்கையைக் காற்றில் பறக்க விடும் பிற்போக்கு சக்திகளை ஜனநாயகரீதியில்முறியடிப்பதைக் கழகம், ஒரு அறப் போராட்டமாகவே கருதுகிறது.

### பிறவிப் பயன்

இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதை, தமிழைப் போற்றுவதை, கழகம், தான் பிறவியெடுத்ததற்கான காரணங்களில் ஒன்ருகக் கருதுகிறது.


இந்திய ஒருமைப்பாட்டையும் அண்டை மாநிலங்களோடு தோழமையையும் விரும்புகிற அதே நேரத்தில் தமிழ் நாட்டுக்கு ஊறு விளைவிக்கிற நிலைமையில் ''ஹேமவதி'' போன்ற அணைகள் கட்டப்படுவதை எதிர்த்து, தனது நியாயத்தை நிலைநாட்டி வெற்றி பெறுவதில் கழகம் மிகுந்த உறுதியோடு இருக்கிறது.

### சபதம்

வியர்வை கொட்டப் பாடுபடும் விவசாயிகள், தொழிலாளர்கள், வசதியற்ற நிலையில் தங்கள் தொழிலை நடத்தும் முடிதிருத்துவோர், சலவையாளர், இன்னேரன்ன பாட்டாளி மக்களுக்கும் சமுதாயத்தின் அடித்தளத்தில் அவதிப்படுவோருக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், படிப்படியாக வசதிகளை அளிக்கக் கழகம் சபதம் ஏற்றுக்கொள்கிறது.

தொழிலாளர் கிளர்ச்சியாயினும் மாணவர் கிளர்ச்சியாயினும், விவசாயிகள் கிளர்ச்சியாயினும் கிளர்ச்சி நடத்துவோரைப் பற்றி சிந்திக்காமல், கிளர்ச்சியின் காரணத்தை உணர்ந்து, அவைகளில் வீண் கவுரவப் பிரச்சினை பார்க்காமல் அவர்தம் முறையீடுகளுக்குச் செவிசாய்த்து, நியாயமெனப் பட்டதைச் செய்வதற்குத் தயக்கம் காட்டத் தேவையில்லை யென்பதே கழகம் தொடர்ந்து கடைபிடிக்க விரும்பும் பண்பாகும்.


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்

போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி, கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழ் திரையுலக வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் சித்திரம்
இப்பொழுது 4வது வாரமாக அமோக வெற்றியுடன் காட்சியளிக்கிறது





கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)

* நடிகர்திலகம் சிவாஜிகணேசன்

* காஞ்சனா ஸ்ரீதரின்

எம். என். நம்பியார் நாகேஷ் எஸ். வி. ரங்கராவ் நடித்த



# சிவந்த மண்

ஈஸ்ட்மென் கலர்

கதை-வசனம்-டைரக்ஷன் ஸ்ரீதர்

2வது வெற்றி வாரம் கிங்ஸ்லி சப்பயர் மைலன்

ஜெய்சங்கர் வாணிஸ்ரீ —நடித்த— கன்னிப் பெண்

---

பார்த்துவிட்டீர்களா **விளையாட்டுப்பிள்ளை** யை

2வது மாதமாக தன் நடிப்பினிலும், வீரச் செயல்களினிலும் பார்த்தவர்களை மீண்டும் தன்னைச் சந்திக்கும்படி தூண்டிக் கொண்டிருக்கிறார் — நடிப்பிலக்கணம் **சிவாஜி**

**செல்லமகால் 2வது மாதம் ஈரோஸ்** (பாமன் கடை)

சிவாஜி—பத்மினி—சோ— T. S. பாலையா—சிவகுமார் நடித்த

# விளையாட்டுப் பிள்ளை

(ஈஸ்ட்மென் கலர்)

---

விரைவில் எதிர்பாருங்கள் **நில் கவனி காதலி**

---

ஜனத்திரள் பெருக்கெடுத்த வண்ணம் வெற்றி நடைபோடுகிறாள்

**சென்ட்ரல்** (மருதானை) **ஜெஸீமா** (கிராண்பாஸ்) **ராணி** (யாழ்நகர்)

நடிப்புலகமேதை **சிவாஜிகணேசன்** கலைச்செல்வி **ஜெயலலிதா**

பாலாஜி நாகேஷ் சுந்தரராஜன் முத்துராமன் தேவிகா குமாரிசச்சு

நடித்த சுஜாத்தாவின்

# எங்கிருந்தோ வந்தாள்

(ஈஸ்ட்மென் கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 19 ஏ, இலக்கத்தில் 1971ம் வருடம் பெப்ரவரி மாதம் 9-ம் திகதி செவ்வாய்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது. —ஆசிரியர்: கோவைமகேசன்